KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 02 மே 2025 இதழ்:- 18

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## அமெரிக்காவுடனான பழைய உறவு முறிந்து விட்டது! நாங்கள் வலுசக்தி வல்லரசாக மாறுவோம் -புதிய பிரதமர்

அமெரிக்காவுடனான பழைய உறவுகள் முடிவிற்கு வந்து விட்டதாக கனடாவின் புதிய பிரதமராக தெரிவு செய்யப் பட்டுள்ள மார்க் கார்னி தெரிவித்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி எங்களை சிதைக்கப் பார்க்கின்றார் அதன் மூலம் அமெரிக்கா எங்களை உரிமையாக்கலாம் என அவர் கருதுகின்றார் என தெரிவித்துள்ள மார்க் கார்னி இது ஒரு போதும் நடக்காது என தெரிவித்துள்ளார்.(3ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

ஈழநாடு

எதிர்பாருங்கள்! ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை விபரங்கள் உள்ளே!

## நல்லை ஆதீன முதல்வர் இறையடி இணைந்தார்



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 01.05.2025 இரவு 9.40 மணியளவில் கொழும்பில் இறையடி சேர்ந்தார். வைத்திய சிகிச்சைக்காக அவர் கொழும்பு சென்று கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள கம்பன் கழகத்தில் தங்கி இருந்த அவர் சிகிச்சை பலனின்றி இறையடி எய்தினார். சுவாமிகளின் திருவுடல் இன்று வெள்ளி ஆதீனத்திற்கு எடுத்து வரப்பட்டு 02.05.2025 மாலை பூரணத்துவ நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என்று தெரிய வருகிறது. சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் திருமுருகன் அவர்கள் அதற் கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றார். தமிழையும் சைவத்தையும் போற்றி வளர்த்த நல்லை திரு ஞான சம்பந்தர் ஆலய குருமுதல்வரது மறைவுக்கு மதம் கடந்து பலரும் தரப்பினரும் அஞ்சலி செலுத்துகின்றனர்.

## வடக்கில் 5940 ஏக்கர் காணிகளை இரகசியமாக அபகரிக்க சத்தம் சந்தடியின்றி வெளியானது வர்த்தகமானி அறிவித்தல்!

## இந்தியா - பாகிஸ்தான் இராணுவ வலிமை யாருக்கு அதிகம்?

## ஜனாதிபதியின் உரைகளும் சுமந்திரனின் சவால்களும்

THINKING OF

# SELLING OR BUYING A HOME?


www.AgentSiva.com

*Your neighborhood sales representative*

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX REALTRON Realty Inc. Brokerage

Home of the Top Producers



## Siva Kandiah
Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

## Piravien Siva
Sales Representative B.Comm.

**Dir: 647-221-5220**

piravien@gmail.com



22 Years Real Estate Experience


885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated

**Bus: 416-289-3333**

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Warden/Finch

**Scarborough** $424,900
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school

### Kennedy / Hwy 401

**Scarborough** $429,900
1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit


### Markham / Sheppard Ave


**Scarborough** $479,000
1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse

### McCowan / Ellesmere

**Scarborough** $599,000
2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC

### Mccowan & Hwy 401


**Scarborough** $549,900
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views


### Kennedy / 401

**Scarborough** $538,000
2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining


### Simcoe St / 401

**Oshawa** $575,900
3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft


### Grandview Dr. / Bloor

**Oshawa** $649,800
2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated

### 9TH LINE / HIGHWAY 7

**Markham** $1,100,000
4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse

### Dixie/ Glenanna

**Pickering** $799,000
3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities

### Audley Rd & Rossland Rd E

**Ajax** $799,000
3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse


### Markham & Ellesmere

**Scarborough** $1,050,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance


### Morningside/Mcnicol

**Scarborough** $1,099,900
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout

### 401/Morningside

**Scarborough** $1,249,000
4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407

### 10th Line/ Hoover Park Dr

**Stouffville** $1,499,999
4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed

### 9th Line/Hoover Park

**Stouffville** $999,000
4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# அமெரிக்காவுடனான பழைய உறவு முறிந்து விட்டது! நாங்கள் வலுசக்தி வல்லரசாக மாறுவோம் -புதிய பிரதமர்

அமெரிக்காவுடனான பழைய உறவுகள் முடிவிற்கு வந்து விட்டதாக கனடாவின் புதிய பிரதமராக தெரிவு செய்யப் பட்டுள்ள மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி எங்களை சிதைக்கப் பார்க்கின்றார் அதன் மூலம் அமெரிக்கா எங்களை உரிமையாக்கலாம் என அவர் கருதுகின்றார் என தெரிவித்துள்ள மார்க் கார்னி இது ஒருபோதும் நடக்காது என தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா எங்கள் வளங்களை நாட்டை தனதாக்கிக் கொள்ள முயல்கின்றது என நான் பல மாதங்களாக எச்ச ரித்து வந்தேன் என அவர் தெரிவித்துள்ளார்.

கனடா தற்போது வரலாற்றின் மிக முக்கியமான தருணத் தில் உள்ளது,அமெரிக்காவுடான எங்களின் பழைய உறவு முடிவிற்கு வந்து விட்டது என தெரிவித்துள்ள அவர் இது பெரும் துன்பியல் நிகழ்வு என குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவின் துரோகத்தினால் நாங்கள் அதிர்ச்சியடை ந்துள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு சுதந்திர இறைமையுள்ள தேசங்களின் எதிர்காலம் குறித்து நான் விரைவில் அமெரிக்க ஜனாதிபதியுடன் பேசு வேன், உலகிற்கான தலைமைத்துவத்தின் முன்னணியில் இருப்பதற்கு அமெரிக்கா விரும்பாவிட்டால் கனடா



அதனை செய்யும் நாங்கள் வலுசக்தி வல்லரசாக மாறுவோம் எனவும் கனடாவின் புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டு ள்ள கார்னி தெரிவித்துள்ளார்.

# வடக்கில் 5940 ஏக்கர் காணிகளை இரகசியமாக அபகரிக்க சத்தம் சந்தடியின்றி வெளியானது வர்த்தகமானி அறிவித்தல்

வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலய வீதி விடுவிப்பு மற்றும் காணி விடுவிப்பினை அரசு ஒருபுறம் முன்னெ டுத்தவாறே மறுபுறம் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை கையகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசு அடையாளப்படுத்திய காணிகளை எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் ஒருவரும் உரிமை கோரா விட்டால் அவை அரச காணிகளாக பிரகடனப்படுத்தப் படும் வர்த்தமானி அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் மருதங்கேணி முதல் முள்ளி வாய்க்கால் வரை யாழ்ப்பாணம் மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் ஆகியவற்றின் பெரும்பாலும் கடற்கரையோரப் பிரதேசங்களை அண்டி 5 ஆயிரத்து 940 ஏக்கர் நிலம் அரச உடமையாக்கப்படு வதற்கான வர்த்தமானி அறிவித்தல் காணி ஆணையாளர் நாயகத்தால் சத்தம் சந்தடியின்றி வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் இவ்வறிவித்தல் தமிழ் மொழியின்றி ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் மட்டும் காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானி அறிவிப்பு பிரசுரமாகியுள்ளது. யாழ். குடாநாட்டின் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவு, கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி மற்றும் கண்டாவளை பிரதேச செயலா ளர் பிரிவுகளின் கடற்கரையோரங்கள் வழியாக முல்லைத் தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் வரை இந்தப் பிரதேசங்கள் நீள்கின்றன. இந்தப் பிரதேசங்களில் உள்ள நிலங்களில் அரச நிலம் எது, தனியார் நிலம் எது எனப் பிரதேச செயலகங்களுக்கோ அல்லது மாவட்ட செயலகங் களுக்கோ அடையாளம் தெரியாத காரணத்தாலேயே இவ்வாறான அறிவித்தல் வெளியிடப்படுவதாகவும் மூன்று மாத காலப் பகுதிக்குள் தமது காணி என்று தனியார் ஆவணங்களைச் சம்ப்பிக்கும் பட்சத்தில் அந்த நிலங்களை விடுவித்து ஏனைய நிலங்கள் அரச நிலம் என 3 மாத நிறைவில் மீண்டும் ஒரு வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படும் என அந்தப் பகுதிகளின் பகுதி பிரதேச செயலாளர்கள் பதிலளிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் வெளிநாட்டில் இருக்கின்றமையாலோ அல்லது உயிரிழந்திருக்கின்றமை யாலோ அந்த நிலங்களுக்கு உரிய காலத்தில் உரிமை கோராவிடின் அவ்வாறான நிலங்களையும் பொதுப் பயன்பாட்டு நிலங்களையும் அரச நிலங்களாக்கும் முயற்சி யாகவே இது கருதப்படுவதாக அந்தப் பகுதிகளின் நில உரிமையாளர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் 500 ஏக்கருக்கும் அதிகமான நிலங்களை அரச காணிகளாகச் சுவீகரித்து பிற நாடு ஒன்றுக்கு வழங்க முயற்சி இடம் பெறுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டிய போது அவ் வாறு எந்த முயற்சியும் இல்லை என அரசும் அதிகாரி களும் மறுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது

# நல்லை ஆதீன முதல்வர் இறையடி இணைந்தார்



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமா சாரிய சுவாமிகள் 01.05.2025 இரவு 9.40 மணியளவில் கொழு ம்பில் இறையடி சேர்ந்தார். வைத்திய சிகிச்சைக்காக அவர் கொழும்பு சென்று கொழு ம்பு வெள்ளவத்தையில் உள்ள கம்பன் கழகத்தில் தங்கி இருந்த அவர் சிகிச்சை பலனின்றி இறையடி ஏய்தினார்.

சுவாமிகளின் திருவுடல் இன்று வெள்ளி ஆதீனத்திற்கு எடுத்து வரப்பட்டு 02.05.2025 மாலை பூரணத்துவ நிகழ்வு கள் இடம்பெறவுள்ளன என்று தெரிய வருகிறது. சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் திருமுருகன் அவர்கள் அதற் கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றார்.

தமிழையும் சைவத்தையும் போற்றி வளர்த்த நல்லை திரு ஞான சம்பந்தர் ஆலய குருமுதல்வரது மறைவுக்கு மதம் கடந்து பலரும் தரப்பினரும் அஞ்சலி செலுத்துகின்றனர்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# ஜீ.எஸ்.பி பிளஸ் மீளாய்வு சாதகமான முறையில் அமையும்? ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியத் தலைவர் தெரிவிப்பு!

ஜீ.எஸ்.பி. பிளஸ் மீளாய்வு சாதகமான முறையில் கருத்தில் கொள்ளப்படுவதுடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகை தரப்படுத்தப்பட்ட மற்றும் தரமான பொருட்களை விநியோகிக்க இலங்கைக்கு மேலும் ஊக்கமளிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிரிவிற்கான தலைவர் சார்ல்ஸ் வைட்லி (Charles Whiteley), தெரிவித்தார்.



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும் இடையில் 30 ஏப்ரல் 2025 புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே சார்ல்ஸ் வைட்லி இவ்வாறு தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு, வர்த்தக ரீதியான பல வெற்றிகளை அடைய உதவியுள்ளது என்றும், தொடர்ந்தும் வர்த்தக வெற்றிகளை அடைய இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் சார்ல்ஸ் வைட்லி தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ வரிச் சலுகையை வழங்க, கருத்தில் கொள்ளப்படும் அளவுகோல்கள் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளுடன் ஒத்துப் போகின்றன என்றும் சார்ல்ஸ் வைட்லி குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ வரிச் சலுகை அல்லது பொதுவான விருப்பத் தேர்வு முறை தொடர்பான 27 சர்வதேச இணக்கப்பாடுகளை செயல்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இதன் போது மீளாய்வு செய்யப்பட்டது.

மேலும் இங்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, இலங்கை பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்த நேரத்தில் ஐரோப் பிய ஒன்றியம் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

அதேபோல் ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ சலுகை இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு சாதகமான சூழலை உருவாக்கியுள்ளதுடன், பொருளாதார வளர்ச்சியிலும் தாக்கம் செலுத்தியிருப்பதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பொருளாதார ரீதியில் சரிவடைவதற்கு முன்னைய ஆட்சியாளர்களின் அரசியல் முறையும், வீண் விரயமும், மோசடியுமே காரணமாக அமைந்திருந்ததாகவும், இப்போது நாடு மீண்டும் சரியான நிர்வாகத்தைக் கொண்டதாக மாற்றப்பட்டு வருவதாகவும், அதற்கு சிறிது காலம் அவகாசம் அவசியம் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தற்போதைய அரசாங்கத்தின் மீது ஒட்டுமொத்த மக்களும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இலங்கையில் முன்னைய அரசாங்கங்கள் தெற்கு சிங்கள வாக்குகளை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டன. ஆனால் இம்முறை வடக்கின் தமிழ் மக்கள், கிழக்கு முஸ்லிம் மக்கள் மற்றும் தெற்குச் சிங்கள மக்களும் தற்போதைய அரசாங்கத்தை உருவாக்க ஆதரவளித்தனர் என்பதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் சரியான முறையில் நிறைவேற்றப்படும் என்றும் உறுதியளித்தார்.

### மனோகணேசன் கோரிக்கை

ஜிஎஸ்பி பிளஸ் வரி சலுகையை வழங்க நிபந்தனைகளை விதியுங்கள். இதுதான் தமிழரின் எதிர்பார்ப்பாகும் என ஐரோப்பிய ஒன்றிய ஜிஎஸ்பி ப்ளஸ் (GSP+) கண்காணிப்புக் குழுவிடம் எடுத்துரைத்துள்ள மனோ கணேசன் தலைமையிலான குழு எழுத்து மூல ஐந்து அம்ச கோரிக்கைகளையும் சமர்ப்பித்துள்ளது.

சர்வதேச சமூகத்தின் மீது நம்பிக்கை வைத்து தமிழ் மக்கள் சலிப்பு அடைந்து விட்டார்கள். இலங்கை தொடர்பில் ஐ.நாவில் பிரதான பங்களிப்பு செய்த அமெரிக்காவும் இன்று ஒதுங்கி விட்டது. இந்நிலையில் எமது கடைசி சர்வதேச நம்பிக்கை ஐரோப்பிய ஒன்றியம் என்பதைப் புரிந்து கொண்டு நீங்கள் இலங்கை விவகாரத்தை அணுகுங்கள் என்றும் எடுத்துரைத்துள்ளது.

பயங்கரவாத தடை சட்டத்தின் உடனடி இடை நிறுத்தம், புதிய அரசியலமைப்புக்கான கலந்துரையாடல் உடனடி ஆரம்பம் உண்மை ஆணைக்குழு (Truth Commission) மூலம் காணாமல் போனோர் மற்றும் பொறுப்பு கூறல் விவகாரங்களின் உடனடி அர்த்தபூர்வ நடவடிக்கை, நீண்டகால (16ம் பக்கம் பார்க்க)


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# இராணுவப் பாதுகாப்புடன் குஞ்சரம் ஊர்ந்த டக்ளஸின நிலை

விதி வலியதென்பது அனைவரிற்கும் தெரியும். இராணுவ பாதுகாப்புடன் கவச வாகனங்களில் பயணம் செய்து கட்டைப் பஞ்சாயத்து செய்து கொண்டிருந்த டக்ளஸ் தேவானந்தாவை காலம் கைது அச்சத்துடன் மோட்டார் சைக்கிள்களிலும் லாண்ட் மாஸ்டர்களிலும் அலைய விட்டிருக்கின்றது.

தீவகத்திற்கு செல்லும் போதெல்லாம் பல்லக்கில் செல்வதாக காட்டிக் கொண்ட டக்ளஸ் இன்று பினாமியான தம்பியார் தயானந்தா கூட கைவிட்ட நிலையில் திரிவது விதியே என்கின்றன பாதிக்க ப்பட்ட குடும்பங்கள்.

சம நேரத்தில் டக்ளஸ் தேவானந்தாவை நியாயம் செய்து அவரிடம் பலன் பெற்று அதற்கு பிரதியுக பாரமாக அவரை சிற்பியாக புகழ்ந்து கொண்டிருந்த படித்ததாக தம்மை தாமே சொல்லிக்கொண்ட பெருமக்கள் சிலர் ஜேவிபி பக்கம் தாவி அனுரா குமார திஸாநாயக்கவை தேச தந்தையாக புகழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என முன்னாள் விரிவுரையாளர் ஒருவர் கருத்து முன்வைத்துள்ளார்



# கனடா பாராளுமன்றத்தில் 3 தமிழ் எம்.பிக்கள்!



கனேடிய பாராளுமன்றத்தில் முதன் முறையாக மூன்று தமிழ்ப்பூர்வீக உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். கனேடிய பொதுத்தேர்தலில் இலங்கை தமிழ் பூர்வீகத்தைச் சேர்ந்த ஐந்திற்கு மேற்பட்ட தமிழ் கனேடியர்கள் போட்டியிட்டனர்.

இந்தநிலையில் அவர்களில் ஹரி ஆனந்தசங்கரி, யுவனிதா நாதன் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர். இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழரான அனிதா ஆனந்த்தும் ஆளும் கட்சியான லிபரல் கட்சியில் வெற்றி பெற்றுள்ளார்.

இந்த தேர்தலில் ஆளும் லிபரல் கட்சியில் இருந்து தமிழ் கனேடியரும் கனேடிய நீதி அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி தனது ஸ்கார்பாரோ கில்ட்வுட் – ரூஜ் பார்க் தொகுதியில் போட்டியிட்டிருந்தார்.

அதேபோல ஆளும் கட்சியின் சார்பில் யுவனிதா நாதனும் பிக்கரிங் – புரூக்ளின் தொகுதியிலும் களம் இறங்கியிருந்தார். Oakville கிழக்கு தொகுதியில் அனிதா ஆனந்த் போட்டியிட்டிருந்தார்கள்.

# கனடாவின் புதிய பிரதமருக்கு டிரம்ப் வாழ்த்து

கனடாவின் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க் கார்னிக்கு அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அவரை தொலைபேசியில் தொடர்புகொண்டு வாழ்த்து தெரிவித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு தலைவர்களும், தங்கள் நாடுகள் சுயாதீன மற்றும் இறைமையுள்ள நாடுகளாக இருந்தும், ஒன்றாக இணைந்து மக்களுக்கு நன்மை ஏற்படுத்துவது முக்கியம் என்பதை ஒப்புக் கொண்டனர் என பிரதமரின் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், கார்னி மற்றும் டிரம்ப் இருவரும் நெருங்கிய காலத்தில் நேரில் சந்திக்க ஒப்புக் கொண்டுள்ளனர்.

இதேவேளை அமெரிக்க வெளியுறவுத்துறை, வழமையான ராஜதந்திர முறையை பின்பற்றி மார்க் கார்னி மற்றும் அவரது கட்சியினருக்கு வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளது. ஆனால் அதிபர் டிரம்ப்



கடந்த காலங்களில் கூறியிருந்தபடி 'கனடாவை அமெரிக்காவின் 51வது மாநிலமாக மாற்ற' வேண்டும் என்ற கருத்தை தவிர்த்து, மரியாதையுடனான வாழ்த்தை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த காணிகள் விடுவிப்பு!



யாழ்ப்பாணத்தில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்து ஒரு தொகுதி காணிகள் இன்று வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட்டுள்ளது. யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி மானத ஜெகம்பத் யாழ் மாவட்ட செயலர் ம.பிரதீபனிடம் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள், செயலகத்தில் இடம் பெற்ற நிகழ்வில் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

வசாவிளான் பகுதியில் 20 ஏக்கர் காணிகளும் மாங்கொல்லை பகுதியில் 15 ஏக்கர் நிலங்களும், திக்கம் பகுதியில் 5 ஏக்கர் காணி நிலமுமாக சுமார் 40 ஏக்கர் காணி நிலங்கள் விடுவிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் (காணி) ஸ்ரீமோகன், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர், பருத்தித்துறை பிரதேச செயலர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்

# தோல்வியின் 48 ஆண்டுகள்

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின் 48ஆவது நினைவு தினம். வழமை போல், அவரது கட்சியின் தொண்டர்களால் ஆங்காங்கே நினைவு கூரப்பட்டிருக்கின்றது. தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் பலர், செல்வநாயகம் என்று ஒருவர் இருந்திருக்கின்றார், அவர் தான் தமிழ் அரசுக் கட்சியை ஸ்தாபித்தவர் என்பதை அறிவதற்கு இந்த நினைவு கூர்தல்கள், ஒரு வேளை பயன்பட்டிருக்கலாம்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மூலம் அரசியல் வாழ்வை ஆரம்பித்த செல்வநாயகம், பின்னர், ஜி.ஜி.பொன்னம்பலம் தவறான பாதையில் செல்கின்றார் என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையில் வெளியேறி, இலங்கை தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கினார். 1970களுக்கு பின்னர் அரசியல் நிலைமைகள் பெரியளவில் மாற்றமடைந்து சென்றது — இந்த நிலையில் புதிய சூழலுக்கு ஈடு கொடுப்பதற்கு தமிழ் அரசுக் கட்சி பொருத்தமற்றது என்பதை உணர்ந்து, தமிழர் விடுதலைக் கூட்டணியை ஸ்தாபித்தார்.

சமஷ்டியை அடையும் இலக்குடன் தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கிய செல்வநாயகம், சமஷ்டியை தன்னால் அடைய முடியாது என்பதை உணர்ந்த போது, தனிநாட்டு கோரிக்கையை தூண்டினார். இது மிகவும் முரண்பாடான அரசியல். ஏனெனில், சமஷ்டியை அடையும் இலக்கில் தமிழ் அரசுக் கட்சியை ஸ்தாபித்தார், அந்த முயற்சி வெற்றி பெறாத போது, தனிநாட்டை அடைவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பித்தார். ஆனால், அடையும் வழி தெரியாமலேயே கட்சியை உருவாக்கி, தன்னால் முடிந்த அனைத்தையும் செய்து பார்த்து, இறுதியில் தனது சீடர்களுக்கு தோல்வியை ஒப்படைத்துவிட்டு காலமானார்.

சக்கர நாற்காலியில் இருக்கும் செல்வநாயகம் தனி நாட்டை எவ்வாறு பெற்றுத் தருவார் என்று அன்றிருந்த தலைமுறை சிந்திக்கவில்லை. அவரது வழியில் வந்தவர்களோ இறுதியில் சமஷ்டியையும் கைவிட்டு தனிநாட்டையும் கைவிட்டு, மாவட்ட சபையின் மூலமான அரசியல் தீர்வை நோக்கிச் சென்றதே வரலாறு. செல்வநாயகம் விட்டுச் சென்ற தோல்வி வரலாற்றை மிகவும் பத்திரமாக பாதுகாக்கும் கைங்கரியத்தையே அவரது வழித்தோன்றல்கள் என்போர் இன்றும் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

செல்வநாயகத்தின் இரண்டு கட்சிகளாலும் தமிழ் மக்கள் எதைப் பெற்றுக் கொண்டார்கள் என்று இன்றுள்ள இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் கேட்டால், கூறுவதற்கு அந்தக் கட்சியிடம் பதில் இல்லை. செல்வநாயகத்தினால் விதைக்கப்பட்ட மிதவாத அரசியலின் தோல்விதான், பின்னர் இளைஞர்களின் ஆயுதப் போராட்டப் பாதையாக மாற்றம் பெற்றது. மிதவாதத்தின் தோல்வி தான் ஆயுத விருப்பாகும்.

ஆயுதப் பாதையில் சென்றவர்களின் சரி பிழைகளுக்கு அப்பால், அவர்களிடம் கூறுவதற்கு ஒரு வழியிருந்தது அதாவது ஆயுத பலம் கொண்டு இலக்கை அடைவது. அதிகாரம் என்பது துப்பாக்கிக் குழலிலிருந்து பிறக்கின்றது என்பது தான் அன்றைய ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் தாரக மந்திரமாக இருந்தது.

எனினும் இந்தியாவின் ஆதரவின்றி அது ஒரு போதும், முடியாது என்பதை பலரும் அறிந்து, புரிந்து வெளியேறிய போது, விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும் அந்தப் பாதையில் நம்பிக்கையுடன் பயணித்தது. இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக தமிழர்களின் ஆற்றல், வளம் அனைத்தும் உச்சமாகப் பயன்படுத்தி, பனைமரமாக உயர்ந்து, இறுதியில் முறிந்து போய், உக்கி கரைந்தனர். இன்றைய சூழலில் செல்வநாயகத்தின் வழிகாட்டல் என்று கூறுவதற்கு என்ன இருக்கின்றது? அவரைப் பின் தொடர்வதாகக் கூறிக் கொள்வோர், அவரால் அடைய முடியாமல் போனதை எவ்வாறு அடையப் போகின்றனர்?

செல்வநாயகத்தை நினைவு கொள்வதை ஓர் அரசியல் செயல்பாடாகக் காண்பிக்க முற்படுபவர்களின் பதில் என்ன? ஆகக் குறைந்தது தமிழ் அரசுக் கட்சி ஒரு கட்சிக் கட்டமைப்புடன் கூட இல்லை. செல்வநாயகத்தை நினைத்தல் என்பது உண்மையில் தோல்வியை நினைத்தல் தான்.

# கனடா கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் தேர்தலில் தோல்வி

கனடாவின் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் பியர் பொலியேவ், பொதுத் தேர்தலில் அதிர்ச்சித் தோல்வவியைத் தழுவியுள்ளார். ஒட்டாவாவின் கார்ல்ட்டன் தொகுதியில் சுமார் இரண்டு தசாப்தங்களாக நாடாளுமன்ற உறுப்புரிமையை வகித்து வந்த பொலியேவ் இந்த முறை தோல்வியை சந்தித்துள்ளார்.

இந்த கார்லடட்டன் தொகுதியில், லிபரல் கட்சியின் ப்ரூஸ் ஃபான்ஜாய் 42,374 வாக்குகள் (50.6வீத) பெற்று வெற்றி பெற்றார். இந்த தொகுதியில் போட்டியிட்ட கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பொலியேவ் 38,581 வாக்குகள் பெற்று தோல்வியைத் தழுவியுள்ளார்.

இம்முறை கன்சர்வேட்டிவ் கட்சி நாடளாவிய அளவில் வாக்கு சதவிகிதமும், இடங்களின் எண்ணிக்கையையும் அதிகரித்தாலும் கன்சர்வேட்டிவ் தலைவர் தோல்வியைத் தழுவியுள்ளார். இதேவேளை, தனது தொகுதி முடிவுகள் வரும் முன்பே கட்சி ஆதரவாளர்களிடம் உரையாற்றிய பொலியேவ் தலைமை பதவியை தொடருவதாக உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி வெற்றிப் பெற்றதை ஒப்புக்கொள்வதாக கன்சர்வடிவ் தலைவர் பியர் பொலியேவ் தெரிவித்துள்ளார்.

லிபரல் கட்சியின் தலைவர் மார்க் கார்னியை அவரது வெற்றிக்கு வாழ்த்தினார். அதேசமயம், தனது கட்சியின் சாதனைகள் பற்றியும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.



'என் சக கன்சர்வடி கட்சியினரே, நம்மிடம் இன்று கொண்டாட பல விடயங்கள் உள்ளது.. இன்று நாமே 20 இடங்களை அதிகம் பெற்றுள்ளோம். 1988க்குப் பிறகு, நமது கட்சி பெற்றுள்ள மிக உயர்ந்த வாக்குப் பங்காக இது அமைந்துள்ளது என பொலியேவ் தெரிவித்துள்ளார்.

மேலும், 'என்.டி.பி மற்றும் லிபரல்களுக்கு கூட்டணி அரசு அமைக்க தேவையான இடங்களை நாம் தடுக்க முடிந்தது,' எனவும் கூறியுள்ளார்.

மாற்றம் கடினமானது. ஆனால் அதை சாதிக்க சற்றே நேரம் தேவைப்படுகிறது என உறுதியளித்தார்.

# அமெரிக்கா தனது மேலாதிக்கத்தையும் அதிகார அரசியலையும் முன்னெடுப்பதற்காக வரிகளைப் பயன்படுத்துகிறது சீனாவை இலங்கை நம்ப வேண்டும் -சீனத் தூதுவர்

கொந்தளிப்பான உலகத்தை எதிர் கொள்ளும் இலங்கை தனது சொந்த சட்டபூர்வமான உரிமைகள் மற்றும் நலன்களை இன்னமும் உறுதியாக பாதுகாக்க வேண்டும் என சீனா வேண்டுகோள் விடுத்துள்ளது

சீனா மிகவும் நம்பகரமான சகா என்பதை நம்பவேண்டும் என இலங்கைக்கான சீன தூதுவர் கீ ஷென்கொங் தெரிவித்துள்ளார் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது –



உலக வங்கியின் அறிக்கையின் படி இந்த வருடம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த வருடம் 3.5 வீதமாக காணப்படும். ஆனால் அமெரிக்காவின் உயர் வரிகள் மற்றும் உயர் வறுமை வீதங்கள் போன்றவற்றினால் உருவாகக்கூடிய சவால்களை புறக்கணிக்க முடியாது.

உள்நாட்டு பொருளாதாரத்தின் மீது அமெரிக்க வரிகளின் தாக்கத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எந்த பொருளாதார புயலாலும் பாதிக்கப்படாத வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டியது அரசாங்கத்தின் மிக முன்னுரிமைக்குரிய விடயமாக உள்ளது.

பொருளாதார வளர்ச்சிக்கும் பொருளாதார வலுவிற்கும் இடையிலான ஏற்றத்தாழ்வை கருத்தில் கொள்ளும்போது அமெரிக்க வரி செல்வந்த நாடுகளிற்கும் வறிய நாடுகளிற்கும் இடையிலான ஏற்றத்தாழ்வை மேலும் அதிகரிக்கும். மிகவும் வறிய நாடுகள் மோசமான தாக்கத்தை எதிர்கொள்ளும்.

மிக மோசமாக பாதிக்கப்பட்ட நாடு என்ற வகையில் அபிவிருத்திக்கான இலங்கையின் உரிமை குறைமதிப்பிற்குள்ளாக்கப்பட்டுள்ளது. அதன் பலவீனமான பொருளாதாரம் மேலும் அழுத்தங்களை எதிர்கொள்ளும். குறிப்பாக ஏற்றுமதி துறை கடும் அழுத்தங்களை எதிர்கொள்ளும்.

இலங்கையின் பிரதான ஏற்றுமதி தொழில்துறையாகவும், வெளிநாட்டு வருமானத்திற்கான வழியாகவும் காணப்படுகின்ற ஆடை தொழில்துறை, பெரும் வீழ்ச்சியை சந்திக்கும். ஏற்றுமதி அளவு 20 வீதத்தினால் குறைவடையும், அந்த தொழில்துறையை சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்களின் தொழிலுக்கு ஆபத்து ஏற்படும். அமெரிக்கா தனது மேலாதிக்கத்தையும் அதிகார அரசியலையும் முன்னெடுப்பதற்காக வரிகளை பயன்படுத்துகின்ற சூழ்நிலையில், இலங்கையின் அபிவிருத்திக்கு ஆதரவளிக்கவும், உலகளாவிய வர்த்தக பதட்டங்களை எதிர் கொள்வதற்கு இரண்டு நாடுகளிற்கும் இடையிலான கூட்டாண்மையை வலுப்படுத்தவும் தயாராகயிருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

இலங்கை சீன உறவுகள் தெற்கு ஒத்துழைப்பிற்கான ஒரு மாதிரியாக விளங்கும். மேலும் இரண்டு நாடுகளும் பரஸ்பர நன்மை வெற்றி வெற்றி நிலையான வளர்ச்சி என்ற அடிப்படையில் பகிரப்பட்ட எதிர்காலத்தை உருவாக்குவதற்கான முழுமையான திறனை கொண்டவை.

நீதி வெல்லும் அதேநேரத்தில் அநீதி தோல்வியடையும். உலகளாவிய கண்டனங்களை மீறி அமெரிக்கா ஒரு வரிப்போரை முன்னெடுக்கின்றது, உலகின் ஏனைய பகுதிகளிற்கு எதிராக தன்னை முன்னிறுத்துகின்றது.

ஐக்கியம் வலுவை கொண்டு வரும், ஒத்துழைப்பு பரஸ்பர வெற்றிக்கு வழிவகுக்கும். தற்போது முன்னர் ஒருபோதும் இல்லாத வகையில் உலகமும் காலமும் வரலாறும் மாற்றமடைகின்றது. உலகம் கொந்தளிப்பு மற்றும் மாற்றத்தின் ஒரு புதிய கால கட்டத்தில் நுழைகின்றது.

ஒரு தலைப்பட்ச வாதம் மற்றும் பாதுகாப்பு வாதம் ஆகியவற்றை எதிர் கொண்டுள்ள சீனாவிற்கு அது வேண்டாம் என சொல்வதற்கான துணிச்சலும் அதனை செயல் மூலம் நிரூபிப்பதற்கான திறனும் உள்ளது. வெற்றி பெறுவதற்கான நம்பிக்கையும் உள்ளது.

கொந்தளிப்பான உலகத்தை எதிர் கொள்ளும் இலங்கை தனது சொந்த சட்டபூர்வமான உரிமைகள் மற்றும் நலன்களை இன்னமும் உறுதியாக பாதுகாக்கவேண்டும். சீனா மிகவும் நம்பகரமான சகா என்பதை நம்பவேண்டும், அமைதி மற்றும் வளர்ச்சியின் போக்கை பின்பற்ற வேண்டும். மேலும் புவிசார் அரசியல் கூட்டு மோதல்களையும் ஒரு தலைப்பட்ச வாதம் மற்றும் பாதுகாப்பு வாதத்தையும் எதிர்க்கவேண்டும்,

# புலனாய்வுத்துறையிடம் வாக்குமூலம் அளிக்க அசாத் மௌலானா தயார்

ஈஸ்டர் தாக்குதலின் சூ த்திரதாரிகள் தொடர்பில் இலங்கை குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்குமூலமளிக்க அசாத் மௌலானா பச்சைக்கொடி காட்டியிருப்பதாக தெரியவருகின்றது.

தனக்கான பாதுகாப்பு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் வாக்குமூலமளிக்கத் தயாராக இருப்பதாக அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னால் உள்ள 'உளவுத்துறை' என்று அழைக்கப்படும் ஆயுதமேந்திய உளவு சேவைகளுடனான இரகசிய தொடர்பு குறித்த ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலினில் அசாத் மௌலானா தகவல் வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் குற்றப்புலனாய்வு பிரிவினர் அவர் வெளிப்படுத்திய தகவல்கள் குறித்து வாக்குமூலம் பெற முற்பட்டுள்ளனர்.

அசாத் மௌலானா, பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியில் நீண்ட காலமாக பணியாற்றியிருந்தார். தற்போது கட்சி தலைவர் பிள்ளையான் தடுப்பு காவலில் உள்ளார். எனினும் உயிருக்கு அஞ்சி அசாத் மௌலானா தற்போது அரசியல் பாதுகாப்பில் வெளிநாட்டில் வசித்து வருகிறார். இந்நிலையில் இலங்கை குற்றப்புல னாய்வுக் குழுவிற்கும் ஆசாத் மௌலானாவுக்கும் இடையே சில கருத்துப் பரிமாற்றங்கள் நடந்ததை தொடர்ந்து ஆசாத் மௌலானாவின் உயிருக்குப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பில் பேசப்பட்டுள்ளது. இரு தரப்பினரும் ஒப்புக் கொள்ளப்பட்ட நிபந்தனைகள் பிரகாரம் சேனல் 4 அறிக்கை நிகழ்ச்சியில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் முன் வெளியிடப்படவுள்ள அறிக்கை குறித்து ஆசாத் மௌலானா வாக்கு மூலமளிக்கவுள்ளார் எனவும் தெனிய வருகின்றது.



# வைத்தியர் ஷாபியின் புதல்வி உயர்தர பரீட்சையில் 3 A
## தந்தையைப் போன்று மருத்துவராக வர வேண்டும் என்ற ஆசை






District Rank

12

Island Rank

357

Z-Score

2019ஆம் ஆண்டு போலி கருத்தடை குற்றச்சாட்டுக்கு உள்ளாகியருந்த வைத்தியர் ஷா:ஃபி ஷிஹாப்தீனின் மகள் 2024 க.பொ.த உயர்தரத் தேர்வில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற நிலையில் மருத்துவ பீடத்தில் சேர அனுமதி பெற்றுள்ளார்.

சர்ச்சையின் போது குடும்பத்தினர் சந்தித்த கடுமையான பொது கண்காணிப்பு மற்றும் மன அழுத்தம் காரணமாக பாடசாலையை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட போதிலும் அவர் ஒரு தனிப்பட்ட பரீட்சார்த்தியாக தேர்வில் அமர்ந்ததன் மூலம் குறிப்பிடத்தக்க தைரியத்தையும் மீள்த ன்மையையும் வெளிப்படுத்தினார்.

அவர் விஞ்ஞானப் பிரிவில் 3 'ஏ' சித்திகளைப் பெற்று மாவட்ட அளவில் 12 ஆவது இடத்தையும் தேசிய ரீதியில் 357 ஆவது இடத்தையும் பெற்று அரச மருத்துவ பீடத்தில் இடம் பெற்றார்.

முன்னதாக அவர் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையிலும் சிறந்து விளங்கி 9 ஏ சித்திகளைப் பெற்றார். மேலும் மக்களுக்கு சேவை செய்ய தனது தந்தையைப் போல மருத்துவராக வேண்டும் என்ற தனது கனவை பகிரங்கமாக வெளிப்படுத்தினார்.

விசாரணைகளில் குற்றச்சாட்டுகளை நிரூபிக்க எந்த ஆதாரமும் கிடைக்காததால் ஷா:ஃபி ஷிஹாப்தீன் மீதான வழக்கு பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டது. அவரது மகளின் சாதனை மிகப்பெரிய துன்பங்களை எதிர்கொண்ட போது அவர் காட்டிய விடாமுயற்சிக்கு சான்றாக நிற்கிறது.

# யாழ். இந்துவின் சாதனை!
## சிறப்புச் சித்தி பெற்று அசத்திய சகோதரர்கள்




2024ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி 55 3 ஏ சித்திகளையும், 55 2 ஏ சித்திகளையும், 19 ஏ 2பி சித்திகளையும் பெற்று யாழ். இந்துக் கல்லூரி சாதனை படைத்துள்ளது

பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் யாழ். இந்துக் கல்லூரியை சேர்ந்த மாணவர்களான சி.ஜமுனானந்தா பிரணவன் (முதலாம் இடம்) மற்றும் சி.ஜமுனானந்தா சரவணன் (இரண்டாம் இடம்) ஆகிய இரட்டை சகோதரர்கள் மாவட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அத்துடன் விஞ்ஞான பிரிவில் 22 பேர் 3A சித்திகளையும் 13 பேர் 2A சித்திகளையும் 06 பேர் A2B சித்திகளையும் பெற்றுள்ளனர்.

பௌதீக விஞ்ஞான பிரிவில் 27 பேர் 3A சித்திகளையும் 16 பேர் 2A சித்திகளையும் 11 பேர் A2B சித்திகளையும் அடைந்துள்ளனர்.

மேலும் வணிகப்பிரிவில் ஒருவர் 3A சித்திகளையும் 2 பேர் 2A சித்திகளையும் 2 பேர் A2B சித்திகளையும் பெற்றுள்ளனர். கலைப்பிரிவில் 02 பேர் 2A சித்திகளை அடைந்துள்ளனர்.

இதேவேளை உயிரியல் தொழிநுட்பப் ( B-Tech) பிரிவிலும் இயந்திரவியல் தொழினுட்ப (E-Tech) பிரிவிலும் தலா ஒருவர் 3A சித்திகளை பெற்றுள்ளனர்.

2024 ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் யாழ். இந்துக் கல்லூரியை சேர்ந்த மாணவர்களான இரட்டை சகோதரர்கள் மாவட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களை பெற்றுள்ளனர். அத்தோடு அதே இரு சகோரர்கள் தேசிய மட்டத்தில் 3ஆம் மற்றும் 5ஆம் இடங்களை பெற்றுள்ளனர்.

சி.ஜமுனானந்தா பிரணவன் (முதலாம் இடம்) மற்றும் சி.ஜமுனானந்தா சரவணன் (இரண்டாம் இடம்) ஆகிய இரு சகோதரர்களே இவ்வாறு உயர்தரத்தில் சாதனை படைத்துள்ளனர். குறித்த மாணவர்களின் தந்தை நயினாதீவைப் பூர்வீகமாகக் கொண்டவர். அத்துடன் யாழ்.போதனா வைத்திய சாலையில் பிரதிப் பணிப்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சலுகைக் காலம் அறிவிப்பு!

முன்னாள் ஜனாதிபதிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ள இரண்டு வாகனங்களுக்கு மேலதிகமாக, வழங்கப்பட்டுள்ள அரசாங்க வாகனங்களை திருப்பித் தருவதற்கு ஜனாதிபதி செயலகம் சலுகை காலத்தை வழங்கியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தால் தலா மூன்று வாகனங்கள் வழங்கப்பட்டன. எனினும், முன்னாள் ஜனாதிபதி ஒருவர் இரண்டு அரசாங்க வாகனங்களை மட்டுமே பயன்படுத்த முடியும் என்ற அரசாங்கத்தின் முடிவைத் தொடர்ந்து, மீதமுள்ள வாகனத்தை திருப்பித் தருமாறு ஜனாதிபதி செயலகம் மூலம் எழுத்துப்பூர்வ கோரிக்கை விடுத்திருந்தது.

அதன்படி ஜனாதிபதி செயலகத்தில் வாகனங்களை இதுவரை ஒப்படைக்காதவர்களுக்கு சலுகைக் காலம் வழங்க ஜனாதிபதி செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஒரு அமைச்சரவை அமைச்சருக்கு வழங்கப்படும் சலுகைகள் முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் வழங்கப்படுகின்றன.

அதன்படி ஒரு அமைச்சரவை அமைச்சர் வழக்கமாக இரண்டு அரசு வாகனங்களைப் பயன்படுத்துகிறார், மேலும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் அதே முறையில் இரண்டு வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

# பொருளாதார மையங்களாகும் 7 ஜனாதிபதி மாளிகைகள்!



நாடளாவிய ரீதியில் ஜனாதிபதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள 9 சொகுசு பங்களாக்களில் இரண்டை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏனைய பங்களாக்களை பொருளாதார ரீதியில் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சர் கலாநிதி சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த பங்களாக்கள் தொடர்பாக தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி ஜனாதிபதி மாளிகைகளை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு தரப்பிலிருந்தும் பத்துக்கும் மேற்பட்ட வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, யாழ்ப்பாணத்தில் காணப்படும் ஜனாதிபதி மாளிகை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உபயோகத்திற்கு பெற்றுக் கொள்வதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள நிலையில், நுவரெலியாவில் காணப்படும் ஜனாதிபதி மாளிகையை சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக ஈடுபடுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மற்றும் கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகைகளை மாத்திரம் விசேட உற்சவங்களுக்கு பயன்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் வெளிநாட்டு அரச தலைவர்கள் நாட்டுக்கு வருகை தரும் சந்தர் ப்பங்களில் அவர்களை வரவேற்பதற்கும் சந்திப்பு களை மேற்கொள்வதற்கும் அந்த ஜனாதிபதி மாளிகைகள் தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் கண்டி பெரஹெர நிகழ்வுகளை சம்பிர தாயமாக நிறைவேற்றுவதற்காக கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகை அவசியம் எனவும் தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி செயலக நிர்வாகத்தின் கீழ் கொழும்பு, கண்டி, நுவரெலியா, மஹியங்கனை, அநுராதபுரம், கதிர்காமம், யாழ்ப்பாணம், எம்பிலிப்பிட்டி மற்றும் பெந்தோட்டை பிரதேசங்களில் ஜனாதிபதி மாளிகைகள் காணப்படுவதாகவும் கொழும்பு மற்றும் கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகைகள் தவிர்ந்த ஏனைய ஜனாதிபதி மாளிகைகள் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# திருக்கோணேஸ்வரர் ஆலய திருப்பணி வேலைகளை ஆரம்பிக்க தொல்பொருள் திணைக்களத்தின் தடைகளை அநுரா நீக்க வேண்டும்!



திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலய திருப்பணி வேலைகள் தொடர தொல்லியல் திணைக்களத்தின் தடைகளை நீக்க ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலய திருப்பணி வேலைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலய திருப்பணி விடையங்கள் தொடர்பில் இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திருக்கோணேஸ்வர ஆலய புனரமைப்பு வேலைகள் சீராக செய்யமுடியாத வகையில் தெல்லியல் திணைக்களம் தடுத்துவருகின்றது.

ஆலயத்துக்காக லண்டனில் இருந்து கொண்டு வரப்பட்ட 1200 கிலோ எடையுடைய மணி கடந்த ஒரு வருட காலமாக பொருத்தப்படாது திருகோணமலையில் வைக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு கட்ட நிர்மானத்தையும் செய்ய விடாது திருக்கோண மலைச் சூழலில் இருக்கின்ற தொல்லியல் திணைக்களம் தடுத்து வருகின்றது. இந்து சமய நிறுவனங்கள் இலங்கை ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமருக்கும் குறித்த விடயங்கள் தொடர்பாக தெளிவு படுத்தி உள்ளார்கள்.

இந்தியப் பிரதமர் இந்த ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்போது திருக்கோணேஸ்வரம் வருவதாக அறியப்பட்டது ஆனால் அவரது திருக்கோணேஸ்வரப் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றாலும் திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலய திருப்பணியில் இந்திய அரசாங்கம் ஆர்வமாக உள்ளது என இந்தியப் பிரதமர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முதல் இலங்கையில் ஓர் அறிவித்தல் விடுத்துள்ளார்.

குறித்த ஆலய திருப்பணி தொடர்பாக இந்திய தூதரக அதிகாரிகள் பல தடவைகள் வருகை தந்து ஆலயத் திருப்பணி வேலைகள் தொடர்பாக கேட்டறிந்தார்கள் எனினும் எந்தவொரு திருப்பணி வேலைகளையும் ஆரம்பிக்க முடியாதுள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி திருக்கோணேஸ்வரம் ஆலயம் செல்கின்ற வழிகளில் அரசியல் நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ள பெட்டிக் கடைகளை அப்புறப்படுத்தி கோணேஸ்வரச் சுற்றாடலை சீரான முறையில் ஒழுங்குபடுத்தி அங்கு செல்கின்ற பொது மக்கள் இளைப்பாறுவதற்கான மண்டபம், மணிக்கூட்டுக் கோபுரம் போன்றவற்றை அமைப்பதற்கான தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியை வழங்கி திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெறுவதற்கு இலங்கை ஜனாதிபதி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதேவேளை இந்தியாவின் நீண்டகால ஆர்வமும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தின் போது விரைவான முன்னேற்றங்களை கண்ட, இரு நாடுகளுக்கும் இடையிலான நில இணைப்புக்குத் தயாராக இல்லை என்று அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையில் நில இணைப்பை ஏற்படுத்தி, அதனை அதிவேக நெடுஞ்சாலை ஊடாக திருகோணமலையை இணைப்பது இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடாக உள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அண்மைய இலங்கை விஜயத்தின் போது முன்னெடுக்கப்பட்ட 7 ஒப்பந்தங்களில் இருநாடுகளுக்கு இடையிலான நில ரீதியான இணைப்பு முக்கியத்துவம் பெற்றிருந்தது.

2000 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அப்போதைய இந்திய பிரதமாரான அடல் பிஹாரி வாஜ்பாய்க்கும் இடையில் இரு நாடுகளுக்கு இடையில் பாலம் அமைப்பதற்கான முதலாவது இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. ஆனால் நாட்டில் காணப்பட்ட விடுதலை புலிகளுடனான போர் சூழல் இரு நாடுகளுக்கு இடையில் நில இணைப்பை ஏற்படுத்துவதில் நெருக்கடிகளை ஏற்படுத்தியது. இருப்பினும் 2022 ஆம் ஆண்டில் மீண்டும் இரு நாடுகளுக்கு இடையிலான இணைப்புகள் குறித்து பேச்சுவார்த்தைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.





வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# உள்ளூராட்சி சபைகள் யாருக்கு?

நீண்ட இடைவெளிக்கு பின் தலதா மாளிகையின் புனித தந்த தாதுவை தரிசிப்பதற்கு சிங்கள மக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. அதன் விளைவாக கண்டிமா நகரை நோக்கி லட்சக்கணக்கான யாத்திரிகர்கள் குவிந்தார்கள். சன நெரிசலில் சிக்கி ஓர் இருதய நோயாளி இறக்க நேரிட்டது. பொருளாதார நெருக்கடியின் போது எரி பொருளுக்காக நின்ற மிக நீண்ட வரிசைகளுக்குப் பின் புனித தந்த தாதுவை தரிசிப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் வரிசையில் வந்தார்கள். எதிர்பாராத இந்த ஜனத்தொகையினால் கண்டி மாநகரம் குப்பை மேடாகியது.



நகரத்துக்குள் புதிதாக நுழையும் யாத்திரிகர்களை வரவேண்டாம் என்று கூறித் தடுத்து நிறுத்த வேண்டி ஏற்பட்டது. கண்டி மாநகரின் புவியியல் கொள்ளளவை மீறி யாத்திரிகர்கள் குவிந்தார்கள். அவர்களுக்கு தேவையான வசதிகளையும் சுகாதார ஏற்பாடுகளையும் செய்து கொடுக்க மாநகர நிர்வாகத்தால் முடியவில்லை. இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் குப்பைகளை முழுமையாக அகற்ற முடியவில்லை.

எனது நண்பர் ஒருவர் சொன்னார், புனித தந்த தாதுவை தரிசிப்பதற்கு சாதாரண சிங்கள மக்களை அனுமதித்ததன் மூலம் சிங்கள பௌத்த கூட்டுணர்வை தன்னோடு வைத்துக் கொண்டிருக்க தேசிய மக்கள் சக்தி முயற்சிக்கின்றது என்று. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களுக்கு கிடைத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இம்மாதம் நடக்கவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் உறுதிப்படுத்துவதற்கு அவர்கள் உழைக்கின்றார்கள்.

புனித தந்த தாதுவை தரிசிப்பதற்கு மக்களை அனுமதித்தமை தேர்தல் உள்நோக்கங்களைக் கொண்டது என்று ஊகிக்கக் கூடியதாக உள்ளது என்றும் நண்பர் சுட்டிக் காட்டினார். தேசிய மக்கள் சக்தியானது ஓர் ஆளுங்கட்சி என்ற அனுகூலங்களைப் பயன்படுத்தி, அரச வளங்களைப் பயன்படுத்தி அரச வைபவங்களை பண்பாட்டு நிகழ்வுகளை தனது தேர்தல் பிரச்சாரக் களங்களாக திட்டமிட்டு மறைமுகமாகப் பயன்படுத்தி வருகிறது.

தென்னிலங்கையில் சிங்கள பௌத்த உணர்வுகளை ஒன்று குவித்து அதன் மூலம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு தேசிய மக்கள் சக்தி முயற்சிக்கின்றது.

அதேசமயம் தமிழ்ப் பகுதிகளில் தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு இடையிலான ஐக்கியமின்மையை அவர்கள் தங்களுக்குரிய பிரகாசமான வெற்றி வாய்ப்பாகக் கருதுகிறார்கள். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நோக்கியும் தமிழ் கட்சிகள் ஐக்கியப்படாத ஒரு பின்னணியில், தேசிய மக்கள் சக்தியானது தமிழ்ப் பகுதிகளில் உற்சாகமாக வேலை செய்கின்றது. பெரும் கூட்டங்களை ஒழுங்குப்படுத்தி தமிழ் மக்களை கவர்ந்திழுக்க முயற்சிக்கின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் பெரிய கூட்டங்களை நடத்துவதற்கு நிதி இல்லையாம். அதனால் அவர்கள் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டங்களை மட்டும் தான் ஒழுங்குபடுத்தி வருகிறார்கள்.

இது கடந்த நாடாளுமன்றத் தேர்தல் களத்திலும் காணப்பட்ட ஒரு தோற்றப்பாடாகும். பெரும் கூட்டங்களை ஒழுங்குபடுத்தா விட்டால் மக்கள் மத்தியில் நொதிப்பை ஏற்படுத்த முடியாது. அது தேசிய மக்கள் சக்திக்குத் தெரிந்திருக்கின்றது.

ஆனால் தமிழ்த் தேசிய கட்சிகளோ புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதியில் தங்கி இருப்பவை. புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதி பெரிய அளவில் கிடைக்கவில்லை என்றால் அவர்களால் பெரிய கூட்டங்களை ஒழுங்குபடுத்த முடியாதா? புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதிப் பங்களிப்பு இல்லை என்றால் தாயகத்தில் கட்சிகளால் ஒரு கட்டத்துக்கு மேல் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என்பதைத் தான் கடந்த ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலும் பொது தேர்தலும் நடக்கவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் நமக்கு உணர்த்துகின்றனவா?

தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்கிடையே ஒற்றுமைப்படா விட்டால் அல்லது குறைந்தபட்சம் பகை தவிர்ப்பு உடன்படிக்கை ஒன்றையாவது செய்திருந்திருந்தால் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் வாக்குகள் நான்குக்கு மேற்பட்ட தரப்புகளால் சிதறடிக்கப்படும் வாய்ப்புக்களைக் குறைத்திருக்கலாம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த பாடத்தின் அடிப்படையில் கற்றுக்கொண்டு தமிழ்க் கட்சிகள் தங்களுக்கு இடையே ஏதாவது ஒருங்கிணைப்புக்குப் போக வேண்டும் என்று பல்வேறு தரப்புகளும் தொடர்ச்சியாக எழுதியும் பேசியும் வலியுறுத்தியும் வந்தன.

கடந்த பெப்ரவரி மாதம் ஜநா அதனுடைய 70ஆவது ஆண்டு நிறைவு வைபவத்தை யாழ். திண்ணை விடுதியில் கொண்டாடிய பொழுது அதில் சுமந்திரனும் வந்திருந்தார். அவர் என்னிடம் கேட்டார், அனுர அலை இப்பொழுது ஓய்ந்து விட்டதா? இல்லையா? என்று.

நான் சொன்னேன், அது இப்பொழுது அனுர அலை மட்டும் அல்ல, ஆளுங் கட்சி அலை, அரசாங்க அலை. அரசாங்கம் என்ற அடிப்படையில் அரச வளங்களைப் பயன்படுத்தி அந்த அலையை அவர்கள் தட்டி எழுப்பலாம். எனவே அதை எதிர்கொள்வதற்கு தமிழ் தரப்பு ஏதாவது பகை தவிர்ப்பு உடன்படிக்கைக்கு போவதுதான் புத்திசாலித்தனமானது என்று. அவர் எனக்குப் பதில் சொல்லவில்லை. அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அதே வைபவத்தில் மணிவண்ணனைக் கண்ட போதும் இந்த விடயத்தை நான் சொன்னேன். பகை தவிர்ப்பு உடன்படிக்கை தொடர்பாக அவர் அதிகமாகக் கேட்டறிந்தார். அது அவசியம் என்பதனை அவர் உணர்ந்திருப்பதாகத் தெரிந்தது. ஆனால் துரதிஷ்டவசமாக அவருடைய வேட்பு மனு நிராகரிக்கப்பட்டு விட்டது. இதனால் யாழ்.மாநகர சபையில் ஏனைய கட்சிகளுக்கு ஒரு பெரிய போட்டியாளர் அகற்றப்பட்டிருக்கிறார்.

இவ்வாறு ஏதாவது ஒரு போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கைக்கு போகுமாறு தமிழ்க் கட்சிகளுக்கு உரிய காலத்திலேயே கூறப்பட்டிருந்த போதிலும், பெரும்பாலான தமிழ்த் தேசியக் கட்சிகள் அதனைக் கவனத்தில் எடுக்கவில்லை என்றே தெரிகிறது. அல்லது அதனை அவர்கள் தமது கட்சி நோக்கு நிலையில் இருந்தே அணுகினார்கள் என்று தெரிகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நோக்கி முதலில் ஒரு கூட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டது சங்குக் கூட்டணிதான். ஆனால் சந்திரகுமாரை உள்ளீர்த்த காரணத்தாலும் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ரெலோ இயக்கம் வாக்களித்த காரணத்தினாலும் சங்குக் கூட்டணிக்குள் உடைவு ஏற்பட்டது. விளைவாக, இப்பொழுது சங்குக் கூட்டணி முன்னம் இருந்ததை விடவும் மெலிந்து போய் இருக்கிறது. எனினும் கிளிநொச்சியில் சந்திரகுமாருக்கு உள்ள வாக்குப் பலத்தை அவர்கள் அதிகம் நம்புவதாகத் தெரிகிறது.

தமிழரசுக் கட்சி கூட்டுக்குப் போகத் தயார் இல்லை. அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் சரியானவைகள் போல தோன்றலாம். ஆனால் யதார்த்தத்தில் ஒரு ஐக்கிய முன்னணியைக் கட்டி எழுப்ப அவர்கள் இதய சுத்தியுடன் செயற்படவில்லை என்பது தான்



உண்மை.

தாங்கள் தனித்து நின்று வெல்லலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை காரணமாகத்தான் அவர்கள் ஐக்கிய முன்னணிகளை குறித்து அல்லது குறைந்தபட்சம் போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கைகளைக் குறித்து தீவிரமாகச் சிந்திக்கவில்லை.

மூன்றாவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. கடந்த காலத்தில் பெற்ற படிப்பினைகளின் அடிப்படையில் கற்றுக் கொண்டு அவர்கள் ஒரு கூட்டை உருவாக்கியிருக்கிறார்கள். அது நம்பிக்கையூட்டும் ஒரு விடயம். எனினும் தமிழ் வாக்காளர்களுக்கு அது நம்பிக்கையூட்டுமா இல்லையா என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

மேலும் இந்தக் கூட்டு ஏனைய மூன்று தமிழ்த் தேசியத் தரப்புகளோடு பகை



தவிர்ப்பு உடன்படிக்கை ஒன்றுக்குப் போவதற்கு தயாரில்லை என்று தெரிகிறது. ஏனென்றால் அவர்களுடைய வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டங்களில், கட்சிப் பிரமுகர்கள் பேசும் பேச்சுக்களைப் பார்த்தால் அவ்வாறு பகை தவிர்ப்புக்கான வாய்ப்புகள் அதிகமாக இல்லை என்றே தெரிகிறது.

நான்காவது, விக்னேஸ்வரனின் மான் கட்சி. மணிவண்ணன் போட்டிக் களத்தில் இருந்து அகற்றப்பட்டமை அக்கட்சியைப் பொறுத்தவரை பெரிய வீழ்ச்சி.

இவ்வாறாக தமிழ்த் தேசியத் தரப்பு இப்பொழுது நான்காக நிற்கின்றது.

தேசிய மக்கள் சக்தி என்ற பொது எதிரிக்கு எதிராகச் செய்யும் பிரச்சாரத்தில் மட்டும் தான் அவர்கள் ஒன்றாக நிற்கின்றார்கள். ஏனைய விடையங்களில் அவர்கள் தனித்தனியாகவே நிற்கிறார்கள். என்.பி.பியை எதிர்ப்பதால் மட்டும் அதைத் தோற்கடித்து விட முடியாது என்பிபிக்கு எதிராக ஒரே அணியில் நின்றால்தான் அதைத் தோற்கடிக்கலாம். அதுதான் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கற்ற பாடம்.

தனித்தனியாக நின்றதன் விளைவாகத்தான் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அவர்களால் தேசத் திரட்சியைப் பாதுகாக்க முடியவில்லை. அதன் விளைவாகக் கிடைத்த வெற்றிகளின் அடிப்படையில்தான் அண்மையில் அமைச்சர் பிமல் ரட்டநாயக்க “நாங்கள் தான் இலங்கைத் தீவில் உள்ள மிகப் பெரிய தமிழ்க் கட்சி” என்று கூறியிருக்கிறார். வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் தங்களுக்குக் கிடைத்த ஆசனங்களின் அடிப்படையில் அங்கெல்லாம் தாங்கள்தான் பெரிய தமிழ்க் கட்சி என்று அவர் கூறுகிறார். இந்த அடிப்படையில் முழு இலங்கையிலும் தேசிய மக்கள் சக்திதான் மிகப்பெரிய தமிழ்க் கட்சி என்று அவர்கள் கூறத் தொடங்கி விட்டார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் அவர்கள் தமது வெற்றி வாய்ப்புகளைப் பாதுகாத்துக் கொள்வார்களாக இருந்தால், தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாகக் கருதவில்லை, ஒரு தேசிய இனம் என்று கருதவில்லை, ஒரு தேசிய இனம் என்ற காரணத்தால் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு தீர்வை அவர்கள் கேட்கவில்லை,என்று கூறக்கூடும். அதை எப்படித் தமிழ்த் தேசியக் கட்சிகள் தடுக்கப் போகின்றன?

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

26 ஏப்ரல் 2025 - 02 மே 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ் வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 17வது ஆண்டு நினைவஞ்சலி



### சட்டத்தரணி சின்னத்தம்பி நாகராஜா

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்டிருந்த முன்னாள் யாழ்மாநகரசபை முதல்வர் சட்டத்தரணி சின்னத் தம்பி நாகராஜா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாள் 08 மே 2025 வியாழக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினை வாக அன்பு, பாரதி, செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சின்னத்தம்பி நாகராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு, பாரதி, செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 26வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசம்மா நன்னித்தம்பி

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களின் 26வது ஆண்டு நினைவு நாள் 29 ஏப்ரல் 2025 செவ்வாய்க் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகம் இரத்தினவடிவேல்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், தும்பலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு நாள்29 ஏப்ரல் 2025 செவ்வாய்க் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர் களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்வரெத்தினம் செல்வகுமார்

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு செல்வரெத்தினம் செல்வகுமார் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 20 ஏப்ரல் 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு செல்வரெத்தினம் செல்வகுமார் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்லத்தம்பி வரதராஜன்

புங்குடுதீவு 10ம் வட்டாரம் கண்ணகை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பொன்னாந்தோட்டத்தை வதிவிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்லத்தம்பி வரதராஜன் அவர்களுடைய பத்தாவது ஆண்டு நினைவு நாள் 23 ஏப்ரல் 2025 புதன்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு செல்லத்தம்பி வரதராஜன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நமசிவாயம் திருநாவுக்கரசு

புங்குடுதீவு இறுப்பிட்டி ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நமசிவாயம் தனபாலசிங்கம் அவர்களின் ஆறாவது ஆண்டு நினைவு நாள் 03 மே 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு நமசிவாயம் திருநாவுக்கரவு அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



29 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஜெயச்சந்திரன் ஜெயஶ்ரீ தம்பதிகளின் செல்வப்புதல்வன் அர்யுன் ஜெயச்சந்திரனின் 5வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அர்யுன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



29 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், தம்பலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாக வும் கொண்டிருந்த திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



29 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களது 26வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



30 ஏப்ரல் 2025 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி கிருசாந்தி றொபின் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி கிருசாந்தி றெபின் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக்கு குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



30 ஏப்ரல் 2025 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி கிருசாந்தி றொபின் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி கிருசாந்தி றெபின் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக்கு குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



30 ஏப்ரல் 2025 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி கிருசாந்தி றொபின் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி கிருசாந்தி றெபின் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக்கு குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



01 மே 2025 வியாழக்கிழமை அளவெட்டியைச் சேர்ந்த ஜனா என்று அன்பாக அழைக்கப்படும் செல்வன் ஐங்கரன் யோகசுந்தரம் அவர்களது 36வதது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



01 மே 2025 வியாழக்கிழமை கனடாவில் வாழும் திருமதி இமயவல்லி விஸ்வலிங்கம் அவர்களது 80வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி இமயவல்லி விஸ்வலிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினர் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழநதைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்நதார்



24 ஏப்ரல் 2025 வியாழக்கிழமை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஶ்ரீரங்கநாதன் கந்தசாமி அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும்.அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




நாட்டுப்பற்றாளர் திரு. மதிசூடி நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையின்
32 வது ஆண்டு விழா



கலைமாமணி டாக்டர்
நித்யஶ்ரீ மகாதேவன்
வழங்கும்
சங்கீத சங்கமம்
2025



ஈழத் தமிழினத்தின்
செஞ்சொற்செல்வர்
ஆறு திருமுருகன்
அவர்கள் வழங்கும் சிறப்புரை
வேர்களைத் தேடுங்கள்

இந்நிகழ்வு மூலம் சேகரிக்கப்படும் நிதி **கனடா தமிழ் சமூக மையத்திற்கும்** ஈழத்தின் அறப்பணியாளர் - செஞ்சொற்செல்வர் **ஆறு திருமுருகனது சமூகப் பணிக்கும்** ஈழநாடு வாசகர்கள் சார்பில் வழங்கப்படும்.

அன்பளிப்பு VIP $100 $50

என் இனிய உறவுகளே! ஓர் உயர்வான நோக்கத்திற்காகவும் - கனடிய மண்ணில் எமது அடையாளத்துக்காகவும் தாயக மண்ணில் எமது இருப்பை உறுதி செய்யவும் நடாத்தப்படும் இந்நிகழ்வு தொடர்பான இத்தகவலை உங்கள் முகநூல் மூலமாகவும் தனிப்பட்ட முறையிலும் உங்கள் நண்பர்களுக்கும் பகிர்ந்து உங்கள் ஆதரவை வழங்குங்கள்.

SUNDAY
JUNE 01
2025
@5:30PM

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
ஈழநாடு
பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com

*விழா 5.30 மணிக்கு ஆரம்பமாகும். 10.30 மணிக்கு நிறைவு பெறும். நேரடி ஒளி, ஒலி பரப்புக் கிடையாது.*


ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
SRI VARASITHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO
416-291-8500
LET LOVE BIND US ALL TOGETHER
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி
இணைந்து வழங்கும்
19ம் ஆண்டு
சிவத்தமிழ் விழா
மே 10 சனிக்கிழமை
பகல் 2:30 மணிக்கு
அனுமதி இலவசம்
கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில்
733 Birchmount Road, Scarborough
பாடல்
காவடி
வேதபாராயணம்
பட்டிமன்றம்
கவிதை
நாடகம்
தேவாரம்
வழக்காடுமன்றம்
வில்லுப்பாட்டு
நடனம்
கல்வி நிலையால செல்வம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி தமிழ், சமய, பண்ணிசை, வேதபாராயண
ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும் முத்தமிழ் விழா
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி 416.291.7900, 647.336.3333 www.varasiththi.com
மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கும் இச் சிவத்தமிழ் விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.



அடகுமாடம் - பவுண் வங்கி - தங்க நகை கடன்
கனகாம்பிகை
அடகுமாடம்
Pawn Bank Inc.
416.269.7198
2613 Eglington Ave East, Scarborough
416.269.7198
2613 Eglington Ave East, Scarborough


பட்டு உலகில் தனித்துவம் படைக்கும்
Fashion WORLD INC.
Home of Toronto's Most Exclusive & Unique Kancheepuram Collection
Tel: 905 471 2223
www.thefashionworld.com
7393 Markham Road, Unit 82,83 & 84
Markham, ON L3S 0B5


குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
THANA INSURANCE Inc.
416.728.5772
Thana Manickavasagar


Qualified Dentist in Your Neighborhood
SANDHURST FAMILY DENTAL CLINIC
Creating Better Smiles Together
Dr. Pavithra Nantheeswarar DDS
416-299-1020


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca



அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மாடம்
416.757.0034
416.994.3861
Kennedy & Eglington, Scarborough


ஸ்ரீரங்கநாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீலஸ்
647.702.2159


ஈழத்தமிழ் மகனின் நிர்வாகத்தின் கீழ்
TECHSOURCE
Computer & Electronics Liquidator
Etobicoke (Albion & Islington)
647-352-2229
Scarborough (Kennedy & Shropshire)
416.757.9111


Shop for Auto Parts
747 AUTOPARTS
THE RIGHT PRICE THE RIGHT CHOICE
Markham 905.471.4447
Scarborough 416.285.4447


Breakfast - Lunch - Dinner & More
DATTA FOOD
100% Vegetarian Food Take-out & Catering
Always Fresh
416-297-8402


MORTGAGE ARCHITECTS
THAYANANDA (DARSHAN) THURAIRAJAH
416.843.6279
darshan.thurair@mtgarc.ca


பூஜா ஸ்டோர்ஸ்
POOJA STORES
1209 Ellesmere Rd. Scarborough, Ontario
416-752-3112 416-738-1271


Disposable Products
Cleaning Supplies
Foam Takeout Box,
Garbage Bags
Paper Towels
Toilet Papers,
Napkins
All kind of Plastic Bags
SHY ENTERPRISE
Retailer of Paper Products
416.602.9714 905.205.0011


ERAA SUPER MARKET
5930 Finch Ave. E, Scaborough, ON
Tel: 416.292.2622
2607 Eglinton Ave. E, Scaborough, ON
Tel: 416.269.2622



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா

கலைமாமணி டாக்டர்
## நித்யஸ்ரீ மகாதேவன்
வழங்கும்

# சங்கீத சங்கமம் 2025





ஈழத் தமிழினத்தின்
செஞ்சொற்செல்வர்
## ஆறு திருமுருகன்
அவர்கள் வழங்கும் சிறப்புரை

# வேர்களைத் தேடுங்கள்

இந்நிகழ்வு மூலம் சேகரிக்கப்படும் நிதி **கனடா தமிழ் சமூக மையத்திற்கும்** ஈழத்தின் அறப்பணியாளர் - செஞ்சொற்செல்வர் **ஆறு திருமுருகனது சமூகப் பணிக்கும்** ஈழநாடு வாசகர்கள் சார்பில் வழங்கப்படும்.

**அன்பளிப்பு** VIP | $100 | $50

என் இனிய உறவுகளே! ஓர் உயர்வான நோக்கத்திற்காகவும் - கனடிய மண்ணில் எமது அடையாளத்துக்காகவும் தாயக மண்ணில் எமது இருப்பை உறுதி செய்யவும் நடாத்தப்படும் இந்நிகழ்வு தொடர்பான இத்தகவலை உங்கள் முகநூல் மூலமாகவும் தனிப்பட்ட முறையிலும் உங்கள் நண்பர்களுக்கும் பகிர்ந்து உங்கள் ஆதரவை வழங்குங்கள்.


**SUNDAY**
**JUNE 01 2025**
**@5:30PM**

**METROPOLITAN CENTRE**
**3840 FINCH AVE EAST**
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
**ஈழநாடு பரமேஸ்**
**416-841-9600**
eelanadu1993@gmail.com

***விழா 5.30 மணிக்கு ஆரம்பமாகும். 10.30 மணிக்கு நிறைவு பெறும். நேரடி ஒளி, ஒலி பரப்புக் கிடையாது.***

# £1.7 மில்லியனுக்கு கன்னித் தன்மையை ஏலத்தில் விட்ட பிரிட்டன் மாணவி



பிரித்தானியாவைச் சேர்ந்த மாணவி ஒருவர் தனது கன்னித் தன்மையை ரூ.65 கோடிக்கு விற்றுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பிரித்தானியாவின் மான்செஸ்டர் நகரத்தைச்சேர்ந்த 22 வயது மாணவி லாரா தனது கன்னித்தன்மையை £1.7 மில்லியனுக்கு (இலங்கை பணமதிப்பில் ரூ.65 கோடி) விற்ற சம்பவம் உலக அளவில் பேசுபொருளாகியுள்ளது. ஒரு ஹாலிவுட் நட்சத்திரம் இவ்விபரீதமான ஏலத்தில் மிக உயர்ந்த தொகையை வழங்கி அதைப் பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஏலத்தை ஒரு பிரபலமான எஸ்கார்ட் நிறுவனம் ஏற்பாடு செய்தது. அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், பிரபலங்கள் என பலர் இந்த ஏலத்தில் பங்கேற்றனர். இறுதியில் ஒரு ஹாலிவுட் நட்சத்திரம் அதிக பட்ச தொகையை செலுத்தியதன் மூலம் இந்த ஏலம் முடிவுக்கு வந்தது.

தனது செயலை நியாயப்படுத்தும் லாரா, இதற்காக நான் எந்த வருத்தமும் படவில்லை. நிறைய பெண்கள் எந்தவித பயனும் இன்றி தனது கன்னித்தன்மையை இழக்கிறார்கள். ஆனால் நான் குறைந்த பட்சம் என் எதிர்காலத்தை பாதுகாத்துக் கொண்டேன் என்று விளக்கம் தெரிவித்துள்ளார்.

எனது கன்னித் தன்மையை ஏலம் விடுவதற்கான எனது முடிவை நிதி சுதந்திரத்தைப் பெறுவதற்கான ஒரு மூலோபாய நடவடிக்கையாக நான் கருதுகிறேன் என்று லாரா குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஏலம் முடிந்த பின்பு, கைப்பற்றிய நபரின் முன்னிலையில் லாராவின் கன்னித்தன்மையை நிரூபிக்கும் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்பகிரங்க ஏலம் அதிக இரகசியத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டது.

இந்த சம்பவம் கற்பு, சமூக பார்வை, பெண்களின் தனிப்பட்ட உரிமை போன்ற விடயங்களைப் பற்றி பல சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது. சிலர் லாராவின் முடிவை ஆதரிக்க, இன்னொருபுறம் பலர் இதை முறைகேடான சமூக மாற்றம் என கண்டித்துள்ளனர்.

லாரா, பெற்ற பணத்தை வளமான வாழ்க்கை அமைத்துக்கொள்ளவும், தனது கனவுகளை நிதி ரீதியாக எவ்வித சிக்கலுமின்றி அடைவதற்கும் பயன்படுத்த இருப்பதாக தெரிவித்துள்ளார்.

# உருளும் உலகில்

## AI மூலம் பிறந்த உலகின் முதல் குழந்தை

செயற்கை நுண்ணறிவு தொழினுட்பத்தின் உதவியுடன் உலகின் முதல் குழந்தை மெக்சிக்கோவில் பிறந்து வரலாற்று சாதனையை படைத்துள்ளது. மெக்சிகோ நாட்டில் உள்ள செயற்கை கருத்தரிப்பு மையமொன்றில் AI மற்றும் AI ரோபோ உதவியுடன் விந்தணுவை கருமுட்டையினுள் ஊசியின் மூலம் செலுத்தி வெற்றிகரமாக கருவுறச்செய்து, அந்த கருவுற்ற முட்டையை ஒரு 40 வயதான பெண்மணி ஒருவரின் கருப்பையினுள் பொருத்தி, குழந்தையை வளரச் செய்து கடந்த மார்ச் மாதம் ஆரோக்கியமாக ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது.



இந்நிலையில் இந்த AI தொழில்நுட்பத்தால் கருத்தரிக்க இயலாத தம்பதிகளுக்கு குழந்தை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு மிக மிக அதிகமான சாத்தியக்கூறுகள் இருக்கிறது என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

இதேவேளை குறித்த சிகிச்சை முறை தொடர்பில் டாக்டர் சாவேஸ் -படியோலா கருத்து தெரிவிக்கையில்,

ஒட்டுமொத்தமாக, ஒவ்வொரு முட்டையையும் கருத்தரிக்க 9 நிமிடங்கள் 56 வினாடிகள் ஆனது.


இருப்பினும் எதிர்கால AI- உதவியுடன் குழந்தை பெறுதல் மிக வேகமாக இருக்கும்.

AI ஐப் பயன்படுத்தி விந்தணு தேர்வு உட்பட ICSI செயல்முறையின் ஒவ்வொரு படியையும் தானியக்கமாக்கும் முதல் அமைப்பு இந்த அமைப்பு என்று அவர் குறிப்பிட்டார். AI உதவி யுடன் பிறந்த உலகின் முதல் குழந்தை ஆரோக்கியமாக பிறந்துள்ளமையானது மருத்துவ உலகில் பெரும் திருப்பு முனையாக அமையும் என ஆய்வாளர்கள் கருதுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வாழ்க்கையில் ஒருமுறை மட்டுமே குளிக்கும் பழங்குடி மக்கள்!

ஹிம்பா கலாச்சாரத்தை சேர்ந்த பெண்கள் வாழ்நாட்களில் குளிப்பதை தவிர்க்கிறார்கள். அதற்கு பதிலாக அவர்கள் வேறு ஏதோ செய்து தங்களை நறுமணத்துடன் வைத்துள்ளளார்கள் அதை பற்றி இந்த பதிவில் பார்க்கலாம். ஹிம்பா






பெண்கள் மிகவும் அழகான ஆப்பிரிக்க பெண்கள் என வகைப்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் பார்ப்பதற்கு ஒரு வசீகர அழகுடன் தென்படுவார்கள். இவர்களின் தலைமுடி மற்றும் தோலில் ஒரு விசித்திரமான சிவப்பு காவி பேஸ்ட்டை பயன்படுத்துவார்கள். இந்த பேஸ்ட் காவி, வெண்ணெய் கொழுப்பு மற்றும் நறுமணம் கொண்ட மூலிகைகள் ஆகியவற்றின் கலவையிலிருந்து தயாரிக்கப்படும்.

இதையே அவர்களின் அழகிற்கு முக்கிய காரணியாக உள்ளது. இந்த பேஸ்ட் மூலம் சிவப்பு நிறமாக மாறுவது அவர்களின் சருமத்தை வலுவான வெயிலிலிருந்து பாதுகாக்கிறது மற்றும் பூச்சிகளை அவர்களை நெருங்கி விடாமல் பாதுகாக்கிறது. இவர்கள் இயற்கைக்கு மதிப்பளித்து அதில் ஆழமாக வாழ்வார்கள். (22ம் பக்கம் பார்க்க)

# 10 ஆயிரம் ரூபாய்க்காக மதுவில் தண்ணீர் கலக்காமல் குடித்தவருக்கு ஏற்பட்ட சோகம்



நண்பர்கள் விடுத்த 10 ஆயிரம் ரூபாய் சவாலால் மதுவில் தண்ணீர் கலக்காமல் குடித்த நபர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்திய மாநிலமான கர்நாடகா, கோலார் மாவட்டம் முல்பாகல் தாலுகா பூஜாரஹள்ளி கிராமத்தை சேர்ந்த கார்த்திக் (21) என்பவருக்கு ஓராண்டு முன்பு திருமணம் நடைபெற்றது. இந்நிலையில் இந்த தம்பதியினருக்கு கடந்த 8 நாட்களுக்கு முன்பு தான் குழந்தை பிறந்தது. இந்நிலையில் கார்த்திக் தனது நண்பர்களான வெங்கடரெட்டி, சுப்பிரமணி உள்பட 5 பேருடன் மது அருந்தினார்.

அப்போது, ஒரு லிட்டர் கொள்ளளவு கொண்ட 5 மது போத்தல்களில் உள்ள மதுவை தண்ணீர் கலக்காமல் குடிப்பதாக கூறி கார்த்திக் தனது நண்பர்களிடம் சவால் விட்டார். அவரது சவாலை ஏற்ற அவருடைய நண்பர்கள் அவ்வாறு குடித்தால் ரூ.10 ஆயிரம் தருவதாக தெரிவித்தனர். இதையடுத்து, கார்த்திக் மதுவில் தண்ணீர் கலக்காமல் குடித்ததால் உடலநலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால், அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் அவர் உயிரிழந்தார். இதனால் அவரது மனைவியும், குடும்பத்தாரும் அதிர்ச்சியில் உறைந்தனர். மேலும், இது தொடர்பாக பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

# தமிழ்த்தேசியம் எதிர் என்.பி.பி?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கட்சி ஒன்றின் வேட்பாளர் என்னிடம் கேடடார். ஒரு துண்டுப் பிரசுரத்தைத் தயாரிப்பதற்கு பின்வரும் கேள்விகளுக்கு கவர்ச்சியான விடைகள் வேண்டும் என்று.



முதலாவது கேள்வி, தேசிய மக்கள் சக்திக்கு ஏன் வாக்களிக்க கூடாது? இரண்டாவது கேள்வி, மேற்படி வேட்பாளருடைய கட்சிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்? மூன்றாவது கேள்வி, ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ஏன் வாக்களிக்கக் கூடாது?

நான் அவரிடம் சொன்னேன், முதலிரண்டு கேள்விகளும் சரி மூன்றாவது கேள்வி பொருத்தமானதா? என்று. ஏனெனில் என்பிபிக்கு எதிராக தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்கு இடையே போட்டித் தவிர்ப்பிற்கு போவதன் மூலம் தான் வாக்குத் திரட்சியைப் பாதுகாக்கலாம். இல்லையென்றால் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் வாக்களித்தது போல தமிழ் மக்கள் வாக்களிப்பார்களாக இருந்தால் என்பிபிக்குரிய வெற்றி வாய்ப்புகள் தொடர்ந்து பாதுகாக்கப்படும். தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரே நேரத்தில் என்பிபிக்கு எதிராகவும் ஏனைய மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு எதிராகவும்-ஆக மொத்தம் நான்கு தரப்புகளுக்கு எதிராகப்- போட்டியிட வேண்டி வரும்.

இது என்பிபிக்கு உற்சாகமூட்டக் கூடிய ஒரு விடயம். தேர்தல் களத்தில் ஒப்பீட்டளவில் என்பிபி அதிகம் உற்சாகமாக வேலை செய்கிறது என்றே தோன்றுகிறது. கிராமங்கள் தோறும் நகரங்கள் தோறும் அவர்கள் தாங்கள் எங்கும் இருக்கிறோம் என்ற ஒரு தோற்றம் வரத்தக்க விதத்தில் பிரச்சாரத்தை காட்சி மயப்படுத்துகிறார்கள். தமிழ்க் கிராமங்களிலும் நகரங்களிலும் கண் படுமிடமெல்லாம் அவர்களுடைய சுவரொட்டிகளும் பதாகைகளும் உண்டு. அது மட்டுமல்ல, ஏனைய எல்லாக் கட்சிகளையும் விட என்பிபிதான் அதிக அளவில் பெருங்கூட்டங்களை ஒழுங்குபடுத்துகிறது. இக்கூட்டங்களில் அரச பிரதானிகள் கலந்து கொள்கிறார்கள்.

என்பிபிக்கு அடுத்தபடியாகத் தான் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தமிழரசுக் கட்சியும் வேலை செய்கின்றன என்று தோன்றுகிறது. தமிழ்த் தேசிய கட்சிகள் இதுவரை குறிப்பிட்டுச் செல்லக்கூடிய பிரமாண்டமான கூட்டங்களை ஒழுங்குப்படுத்தியிருக்கவில்லை. வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டங்கள் தான் நடக்கின்றன. இது கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போதும் ஒப்பிடப்பட்ட ஒரு விடயம். அப்பொழுதும் என்பிபி தான் அதிகம் பெருங் கூட்டங்களை ஒழுங்குபடுத்தியது. அதுவும் அது பெற்ற வெற்றிகளுக்கு ஒரு காரணம். தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களிடம் நிதி இல்லை என்று கூறுகின்றன. புலம் பெயர்ந்த தமிழர்களிடமிருந்து பெரிய அளவில் நிதி திரளவில்லை என்றும் தெரிகிறது. அவ்வாறு பெருங்கூட்டங்களை நடத்தாத ஒரு பின்னணிக்குள் தேசிய மக்கள் சக்தியானது அரங்கில் அதிகம் வேலை செய்யும் ஒரு கட்சி என்ற தோற்றம் எழுகிறது.

அண்மையில் நெடுங்கேணிப் பகுதிக்கு பிரதமர் ஹரிணி போன போது, அங்கே அவரை வரவேற்று பதாகைகள் தொங்க விடப்பட்டன. அந்தப் பததைகளை ஒட்டியவர்களில் ஒருவர் தடுப்பிலிருந்து வந்த முன்னாள் இயக்கத்தவர் என்றும் மற்றவர் ஒதியமலைப் படுகொலையில் கொல்லப்பட்டவரின் மகன் என்றும் அப்பகுதியைச் சேர்ந்த தமிழ்த் தேசியக் கட்சி ஒன்றின் செயற்பாட்டாளர் தன்னுடைய முகநூல் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். அந்தத் தகவல் சரியா பிழையா என்பது தெரியவில்லை.

ஆனால் தேசிய மக்கள் சக்தியை ஆதரிப்பவர்கள் யார் யார் என்று பார்த்தால் அவர்களில் குறிப்பிடத்தக்க அளவு தொகையினர் முன்பு தமிழ்த் தேசியக் கட்சிகளோடு நின்று உழைத்தவர்கள் தான்.

இங்கு யாழ் பல்கலைக்கழகத்தை ஒரு குறிகாட்டி எனலாம். ஒரு காலம் தமிழ்த் தேசிய ஆத்மாவை அடைகாத்த மையங்களில் அதுவும் ஒன்று.ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் மிக ஆபத்தான அரசியல் சூழலில் பல விரிவுரையாளர்கள் ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவாக வேலை செய்தார்கள்.சிலர் கைது செய்யப்பட்டார்கள். சிலர் தலைமறைவாக நேரிட்டது. அப்படிப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களில் எத்தனை பேர் இப்பொழுது தமிழ்த் தேசியக் கட்சிகளோடு பகிரங்கமாக நிற்கின்றார்கள்?

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் இது தான் நிலைமை. அப்பொழுது கிட்டத்தட்ட 15 விரிவுரையாளர்கள் ஒரு அறிக்கை விட்டிருந்தார்கள். அந்த அறிக்கையில் அவர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதனை நேரடியாகச் சொல்லத் தயங்கினார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் வெளிப்படையாகவே தேசிய மக்கள் சக்தியின் மேடைகளில் தோன்றுகிறார்கள்.

அவர்களில் ஒருவர் யாழ்.மாநகர சபைக்குரிய பிரதான வேட்பாளர். மற்றொருவர் மொழிபெயர்ப்பாளராக தமிழ் அரசியற் சூழலிலும் இலக்கியச் சூழலிலும் நன்கு தெரியவ ந்த ஒருவர். எளிமையானவர். சைக்கிளில் தான் திரிவார். அனுரவின் நண்பர்.

பல ஆண்டுகளுக்கு முன்பு யாழ். வீரசிங்க மண்டபத்தில் விடுதலைப் புலிகளால் ஒழுங்கமைக்கப்பட்ட மானிடத்தின் ஒன்று கூடல் நிகழ்வில் மொழிபெயர்ப்பாளராக இருந்தவர். கிட்டு பூங்காவில் நடந்த அனுரவின் கூட்டத்தில் அவர் தான் மொழிபெயர்ப்பாளர்.

இத்தனைக்கும் யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் தான் அதிகம். ஆனால் அவர்கள் அமைப்பாக்கப்படவில்லை. தமிழ் மக்களின் பண்பாட்டுத் தலைநகரம் ஒன்றில் அமைந்துள்ள உயர் கல்வி நிறுவனமானது தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு கல்விச் சமூகமாக ஏன் வெளிப்படையாக இயங்கத் தயங்குகின்றது? ஆசிரியர்களும் சரி மாணவர்களும் சரி ஒரு சமூகமாக செயல்படத் தயாரில்லை. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும் அரசறிவியல் துறைத் தலைவர் ஒருவர் மட்டும் தான் பொது வேட்பாளருக்கான அணியில் வெளிப்படையாகக் காணப்பட்டார். ஆசிரியர்களும் ஒரு சமூகமாக வரத் தயங்கினார்கள் மாணவர்களும் உதிரிகளாகவே வந்தார்கள். அறிக்கைகள் விட ஆயிரம் அமைப்புகள் உண்டு. ஒரு பல்கலைக்கழகம் அறிக்கையோடு நின்றுவிட முடியாது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலோடு “தமிழ்த் தேசியமா? அல்லது என்பிபியா?'' என்ற மோதல் ஏற்பட்டிருக்கும் ஒரு பின்னணியில், ஒரு பகுதி விரிவுரையாளர்கள் வெளிப்படையாக என்பிக்கு ஆதரவாக நிற்கும் ஒரு பின்னணியில் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் தங்களுக்கு விருப்பமான ஏதாவது ஒரு தமிழ் தேசியக் கட்சியோடு வெளிப்படையாக நின்று உழைப்பதற்கு ஏன் தயாரில்லை?

என்பிபிக்கு ஆதரவான விரிவுரையாளர்கள் வெளிப்படையாக வேலை செய்கின்றார்கள். அரசாங்கத்தோடு வேலை செய்வது பாதுகாப்பானது. அது உயர் கல்வியையும் பாதிக்காது பதவி உயர்வுகளையும் பாதிக்காது. ஆனால் தமிழ்த் தேசியத்தின் பக்கம் நிற்பது 'ரிஸ்க்' ஆனது. அதனால் தான் தமிழ்த் தேசியக் கட்சிகளோடு வெளிப்படையாக நிற்பதற்கு பல்கலைக்கழகம் தயங்குகின்றது என்று ஒரு விளக்கம் தரப்படலாம்.

ஆனால் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியும் அர்ஜுனாவும் பெற்ற வெற்றிகளின் பின்னரும், ஒரு பண்பாட்டுத் தலைநகரத்தில் உள்ள உயர் கல்வி நிறுவனம் அவ்வாறு கூறிக் கொண்டிருக்க முடியாது. அதிலும் குறிப்பாக கடந்த 15 ஆண்டுகளாக சிங்களபௌத்த மயமாக்கலை அதிகம் எதிர்கொள்ளும் ஒரு பல்கலைக்கழகம் அவ்வாறு ஓய்ந்திருக்க முடியாது. யாழ். பல்கலைக்கழகத்தின் சில துறைகளில் ஒப்பீட்டளவில் சிங்கள மாணவர்களின் தொகை அதிகரித்து வருகிறது. கடந்த 15 ஆண்டுகளில் அதிகம் சிங்கள பௌத்த மயப்பட்டு வரும் நிறுவனங்களில் யாழ். பல்கலைக்கழகமும் ஒன்று. அது கடந்த 15 ஆண்டு கால தமிழ்த் தேசிய அரசியலின் ஒரு குறி காட்டியாக நிற்கிறது.

தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களையும் கட்சிகளாக வளர்த்துக் கொள்ளவில்லை. தமிழ் மக்களையும் ஒரு தேசமாகத் திரட்டிக் கொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கட்சிகள்.கடந்த 15 ஆண்டுகளாக கட்டமைப்புக்களுக் கூடாகச் சிந்திக்கத் தவறிவிட்டன. மாணவ அமைப்புக்கள், ஆசிரியர்கள் மற்றும் அறிவுஜீவி அமைப்புக்கள், மகளிர் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், தொழில்சார் அமைப்புக்கள் போன்ற அமைப்புகளை உள்வாங்கி தமிழ்த் தேசிய அரசியலை கட்டமைப்புகளுக்கு ஊடாக கட்டியெழுப்பத் தவறி விட்டன. அந்த வெற்றிடத்திற்குள் கட்டமைப்புகளை உருவாக்கும் பயிற்சியும் அனுபவமும் மிக்க ஜேவிபியை அடித்தளமாகக் கொண்ட என்விபி தீயாக இறங்கி வேலை செய்கின்றது. ஏனென்றால் அப்படிப்பட்ட கட்டமைப்புகளை இணைத்து உருவாக்கபட்டது தான் என்பிபி.

கடந்த பொதுத் தேர்தலில் அவர்களுக்கு கிடைத்த வெற்றி எதிர்பாராத ஒன்று. ஆனால் இனி வரக்கூடிய தேர்தல்களில் அந்த வெற்றியை எப்படிப் பாதுகாப்பது? எப்படி அடுத்த கட்டத்துக்கு வளர்த்துச் செல்வது? என்று தான் அவர்கள் திட்டமிடுகிறார்கள். எனது நண்பர் ஒருவர் சுட்டிக்காட்டியது போல தேர்தல் காலத்தில் தலதா மாளிகையின் புனித தந்த தாதுவை மக்கள் தரிசிப்பதற்கு அனுமதித்ததன் மூலம் என்பிபி சிங்கள பௌத்த வாக்குகளைக் கவரப் பார்க்கிறது. அதனால் கண்டி மாநகரத்தின் தெருக்களில் எதிர்பாராத விதமாக குவிந்த யாத்திரிகர்கள் கண்டி மாநகரத்தை குப்பைத் தொட்டியாக்கி விட்டார்கள். தந்த தாதுவைக் காட்டப்போய் குப்பை கொட்டியதில் முடிந்து விட்டதா?

என்பிபி யாழ்ப்பாணத்தில் பலாலி வீதியைத் திறக்கின்றது. சோதனைச் சாவடிகளை மூடுகின்றது, மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குப் போகின்றது. கண்டியில் தலதா மாளிகையைத் திறந்து விடுகிறது. எல்லாமே தேர்தல் உள்நோக்கத்தைக் கொண்டவை. கிட்டுப் பூங்காவில் அனுர வந்த பொழுது அவருக்கு கொடுக்கப்பட்ட வரவேற்புக் காணொளி அதிகமதிகம் பகிரப்படுகின்றது. அவரை நோக்கி ஆண்களும் பெண்களும் தங்களுடைய கைகளை குலுக்குவதற்காக நீட்டுகிறார்கள். சிலர் உணர்ச்சி மேலிட்டால் அல்லது திட்டமிட்டு ஜெய வேவ என்று கோஷம் எழுப்புகிறார்கள்.க டந்த பல தசாப்தங்களில் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு சிங்கள பௌத்த அரசுத் தலைவருக்கு இப்படி ஒரு வரவேற்புக் கிடைத்ததில்லை. இப்படி ஓர் ஈர்ப்பு இருந்ததில்லை.

'அது திட்டமிட்டு கொண்டு வரப்பட்ட ஒரு கூட்டம். திட்டமிட்டு காட்சி மயப்படுத்தப்பட்ட ஒரு விடயம்.என்று கூறிவிட்டுக் கடந்து போக முடியாது. தமிழ்க் கட்சிகள் விட்ட வெற்றிடத்தில் தான் என்பிபி மேலெழுந்தது. அர்ஜுனா மேலெழுந்தார். இப்பொழுதும் தமிழ் தேசியக் கட்சிகள் நான்காக நிற்கின்றன. இது தமிழ் மக்களைக் கவர உதவாது. அதேசமயம் அது என்பிபிக்கு உற்சாக மூட்டுவது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கூட்டு ஒப்பீட்டளவில் முன்னேற்றகரமான ஒரு விடயம். நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரான ஒரு புதிய மாற்றம் அது. எனினும் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டது போல, தமிழ்த் தேசியக் கட்சிகள் போட்டித் தவிர்ப்புக்கு போகக்கூடிய வாய்ப்புகள் பிரகாசமாகத் தெரியவில்லை. பிரச்சாரக் கூட்டங்களிலும் ஒருவர் மற்றவரைத் தாக்கி வருகிறார்கள்.ஒ வ்வொரு கட்சியும் 'நான்நான்' என்று சிந்திக்கின்றது.'நாங்கள' தேசம் என்று சிந்திப்பதாகத் தெரியவில்லை. (22ம்பக்கம்பார்க்க)

# அநுரா அரசை நார் நாராகக் கிழித்துத் தொங்க விட்ட சுமந்திரன்

உங்களுடைய கட்சியிலிருந்து நீங்கள் தெரிந்தெடுத்து பாராளுமன்றத்தின் சபாநாயகராகவும் இந்த நாட்டினுடைய மூன்றாவது பிரஜையாகவும் நீங்கள் நியமித்த நபர் ஊழல்வாதியா இல்லையா என்பதற்கு ஜனாதிபதி பதில் சொல்ல வேண்டும் என தெரிவித்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், இன்றுவரை அவர் தனது கல்விச் சான்றிதழை காட்ட முடியாமல் இருக்கிறாரே என விசனம் வெளியிட்டார்.

யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் 27 ஏப்ரல் 2025 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று பெய்த மழைக்கு முளைத்த காளான்கள் போன்றவர்களே தேசிய மக்கள் சக்தி என்பதை அவர்கள் திரும்பத் திரும்ப நிரூபித்து வருகிறார்கள்.

சைக்கிள் ஓடும் போது கொஞ்ச நேரம் உலக்கி விட்டு அதன் பின்னர் உலக்காமல் செல்வர். இதற்கு முன்னர் இருந்த அரசாங்கம் உலக்கிய வேலைத்திட்டங்களில் அப்படியே இந்த அரசாங்கமும் போகின்றது. பொருளாதார கொள்கையிலும் அது தான் நடக்கிறது.

சர்வதேச நாணய நிதிய பக்கமே தலை வைத்து படுக்கக் கூடாது என்ற தேசிய மக்கள் சக்தியின் அடிப்படை பொருளாதாரக் கொள்கையை மீறி கடந்த ரணில் அரசாங்கத்தின் பொருளாதார கொள்கையில் எந்தவொரு மாற்றமும் இல்லாமல் செயற்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பல குறைகளை தேசிய மக்கள் சக்தியினர் சுட்டிக் காட்டினார்கள். அந்த குறைகளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இன்று அந்த குறைகளை பற்றி அவர்கள் கவலைப்படுவதாக இல்லை.

அதனால் தான் ரணில் விக்ரமசிங்க இது எல்போர்ட் அரசாங்கம் என்றும் வாகனம் ஓட்ட தெரியாமல் பழகுகிறார்கள் என்றும் சொன்னார்.

எமது பக்கம் பார்த்தால் உள்ளூராட்சி சபைகளை முன்னர் நிர்வகித்த அனுபவமிக்கவர்களாக இருக்கிறார்கள். நாங்கள் எல்போர்ட் போட்டு கொண்டு பழக ஆரம்பிப்பவர்கள் அல்ல.

இந்த எல்போர்ட் பற்றி தெரிய வேண்டும் என்று சொன்னால் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை பார்த்தால் தெரியும். ஒரு படித்த பாராளுமன்ற உறுப்பினர் இருக்கிறார். அவர் வாயை திறப்பதில்லை. அவர் ஒரு முறை தவறி வாயைத் திறந்து நாம் சொன்னால் அரசாங்கம் கேட்காது என்று உண்மையை சொன்னார்.

அதன் பிறகு அவர் மூச்சு கூட விடுவது கிடையாது. மற்ற இருவரும் இனித்தான் கதைக்க பேச பழக வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

சபையில் என்ன பேசுவது என்பது தெரியாது இருக்கிறார்கள். ஆட்சி அதிகாரம் செய்ய தெரியாது என்பது வேறு விஷயம். ஆனால் மக்களுடன் கதைக்கவே தெரியாமல் இருக்கிறார்கள்.

முறையாக படிக்காதவர்கள் கூட மக்களுடன் சிறப்பாக பழகுவார்கள் ஆனால் இங்கு அப்படியல்ல. அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பது மக்களுக்கும் புரியவில்லை. அவர்களுக்கும் புரியவில்லை.

ஒரு அசம்பாவிதம் நடந்து விட்டது அது யாழ்ப்பாண மக்களுக்கு கண்கூடாக தெரிகிறது. நாட்டிலேயே யாழ்ப்பாணம் தான் படிப்புக்கு பெயர் போனது. படித்தவர்களை எல்லாம் கொண்ட யாழ்ப்பாணத்திலே பெருமையோடு பேசிக் கொண்டிருந்த நாங்கள் எங்களுடைய மக்கள் வெட்கப்பட்டு போய் இப்படியான பிரதிநிதிகள் எல்லாம் எங்கள் சார்பாக யாழ்ப்பாண பிரதிநிதிகள் என்ற பெயருடன் செல்கிறார்கள்.

பாரிய இழுக்கு நடந்து விட்டது. நடந்தாலும் அதை உணர்ந்தவுடன் அதனை திருத்தி அமைப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் உடனடியாகவே இந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் கிடைத்துள்ளது. எல்போர்ட் போட்டு கொண்டு செல்பவர்கள் சித்தி பெற்று விட்டார்களா? இல்லையா? என்பதை நாட்டு மக்கள் சொல்ல வேண்டும். விசேடமாக யாழ்ப்பாண மக்கள் சொல்ல வேண்டும்.



உள்ளூராட்சி தேர்தலில் வேறு கட்சிகள் ஆட்சி அமைத்தல் பத்து தரம் யோசித்தே பணம் வழங்குவோம் என்று ஜனாதிபதி சொல்கிறார்.

ஏன் அவர் யோசிக்க வேண்டும். நாம் ஏதாவது ஊழல் செய்தோமா? இலங்கை தமிழ் அரசுக் கட்சி நிர்வாகம் செய்த எந்த சபையாவது ஊழலுடன் சம்பந்தப்பட்டதா?

நீங்கள் கொண்டு வந்த சபாநாயகர் போல் அல்லவே நாம். இன்று வரைக்கும் அவர் தனது கல்வி தகைமையை நிரூபிக்கவில்லை.

பொய்யான பட்டத்தை தனக்கு சூட்டி சபாநாயகர் கதிரையில் அமர்ந்து விட்டு அது சவாலுக்கு உட்படுத்தப்பட்ட உடனேயே ஐயையோ என்று சொல்லி பதவி விலகி விட்டார்.

ஆறு நாட்களில் அவர் தனது கல்வித் தகமை நிரூபிப்பார் என யோசித்தேன். ஆனால் ஆறு மாதங்கள் ஆகிவிட்டது இதுவரை எதுவும் நடக்கவில்லை யார் ஊழல்வாதி என நான் ஜனாதிபதியிடம் நேரடியாக கேட்கின்றேன். யார் ஊழல்வாதி?

மக்களுக்கு பொய் சொல்லி பொய்யான பட்டப் படிப்பை முடித்ததாக சொல்லி தன்னை அறிமுகப்படுத்தி விட்டு பதவி விலகிய சபாநாயகர் ஊழல்வாதியா? அல்லது காலாகாலமாக எங்களுடைய சபைகளை ஒழுங்காக எந்தவித ஊழலுக்கும் இடமாளிக்காமல் நிர்வாகித்த நாங்கள் ஊழல்வாதியா?

இன்று தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் பலர் நீதிமன்றத்தின் பிணையில் நிற்பவர்களே. களவுகள் செய்து நீதவான் நீதிமன்ற பிணையில் இருப்பவர்கள் தற்போது வேட்பாளராக நிற்கிறார்கள். இவர்களை வைத்துக் கொண்டு ஜனாதிபதி எங்களுக்கு பிரசங்கம் செய்கிறார்.

பிரதமர் இங்கே வந்த போது கோயில் வளாகத்தில் தேர்தல் பரப்பரை கூட்டம் நடக்கிறது என்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்த போது தேர்தல் ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் போனார்கள். போனவர்களை பிரதமர் பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளேயே அனுமதிக்கவில்லை.

தேர்தல் ஆணைக்குழு ஒன்றை அரசியலமைப்பிலே நிறுத்தி உங்களுக்கு இத்தனை அதிகாரங்களை கொடுத்து வைத்திருக்கிறோம்.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு முதுகெலும்பு இருந்தால் உடனடியாக இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான அதிகாரம் இருக்கிறது.

தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் காவல் படை பொலிஸ் திணைக்களம் முழுவதும் தேர்தல் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டில் வருகின்றது என்று சட்டம் சொல்கிறது.

அரசியலமைப்பு சொல்கிறது. அந்த அதிகாரத்தையும் பாவிக்காமல் சுயாதீன ஆணைகுழு என்ற பெயரையும் சூ ட்டி வைத்துக் கொண்டு எந்த வித சுயாதீனமும் கிடையாது. மிகமுறையற்ற விதத்திலே இந்த செயற்பாடுகள் நடக்கிறது. இதை தட்டிக் கேட்க அவர்களுக்கு முடியவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தை மக்கள் இனங்கான இரண்டு வருடம் தேவைப்பட்டது. இவர்களை இனங்கானவும் இரண்டு வருயம் தேவைப்படும் என யோசித்தோம். ஆனால் ஆறு மாதத்திலேயே இவர்களின் சிவப்பு சாயம் வெளுத்து விட்டது.

ஏனைய தமிழ் கட்சிகளை நாங்கள் விமர்சிப்பதில்லை. நாங்கள் தான் பிரதான கட்சி. பெரிய கட்சி. வடக்கிலும் கிழக்கிலும் சகல தேர்தல் மாவட்டங்களிலும் இருந்து ஒரு பிரதிநிதியாவது பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட கட்சி. எங்களுடைய கட்சி வேறெந்த தமிழ் கட்சியும் அவ்வாறு கிடையாது.

பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக இருப்பது இலங்கை தமிழ் அரசுக் கட்சி. இந்த உதிரித் தமிழ் கட்சிகளை நாங்கள் விமர்சிப்பது கிடையாது ஆனால் அவர்கள் எங்களைப் பற்றி விமர்சிக்கிறார்கள். சுமந்திரன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக அவர்கள் என்னை விமர்சிக்கிறார்கள். நான் வேட்பாளர்கள் கூட கிடையாது.

இந்த இனத்திற்கு ஏற்பட்ட ஆபத்தை எதிர்கொள்வதற்கு நியாயமான முறையில் அந்த ஆபத்து எங்கே என்று வருகிறது என்பது உங்களுக்கும் தெரியும். அவர்களை விமர்சியுங்கள். இந்த அரசாங்கம் கோட்டபாய அரசாங்கம் போல விரைவில் துரத்தி அடிக்கப்படும். அது முழு நாட்டுக்குமானது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாம் இப்போதே செய்ய வேண்டும்.

எங்களது உள்ளூர் அதிகாரங்களை கூட மத்திய அரசை ஆளும் கட்சியிடம் கொடுத்தால் அதன் பிறகு எந்த முகத்தோடு நாம் சமஷ்டி கேட்பது.

கேவலம் உள்ளூர் அதிகார சபை ஆட்சியை கூட எங்கள் மக்கள் மத்திய அரசாங்கத்தில் இருக்கிற கட்சிக்கு கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதன் பிறகு எங்களுடைய நிலைமை என்ன? எமது அரசியல் நிலைப்பாட்டிற்கு என்ன சொல்வது? இந்த ஆபத்தைத்தான் மக்களுக்கு நாம் தெளிவுபடுத்த வேண்டும்.

சமஷ்டி தீர்வை சமட்டி சமட்டி என சொல்லி அந்த தீர்வையும் எமது கட்சியையும் பழித்தவர்களும் கேவலப்படுத்தியவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களும் இன்று சமஸ்டி என்று சொல்கிறார்கள். நல்லது தானே. அதை நாம் விமர்சிக்கவில்லையே.

பாராளுமன்ற தேர்தலில் நடந்த அசம்பாவிதத்தை போக்க இந்த தருணத்தை நழுவ கூட கூடாது. அதை எமது மக்கள் செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் எந்த ஐயப்பாட்டுக்கும் இடமில்லை நாங்கள் முற்றுமுழுதாக ஒற்றையாட்சியை நிராகரிப்பவர்கள் சமஸ்டி ஆட்சி முறை வேண்டும் என்று வலியுறுத்துபவர்கள் உள்ளூராட்சி சபை தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களித்து வெல்லச் செய்ய வேண்டும். அதனை செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்றார்.

## ஜீ.எஸ்.பி பிளஸ் மீளாய்வு சாதகமான...

(4ம் பக் தொடர்ச்சி)தமிழ் அரசியல் கைதிகளின் உடனடி விடுதலை, நவீன அடிமைத்துவம் அம்சங்களைக் கொண்ட மலையக தமிழர் சமூகத்துக்குள் வரும் பெருந்தோட்ட வாழ் மக்களை ஐரோப்பிய கண்காணிப்பு வலயத்துக்குள் கொண்டு வந்து அவர்களது காணி உரிமை உட்பட வாழ்வுரிமைகளை மேம்படுத்தல் ஆகியவை தொடர்பான முன்மொழிவுகளை எழுத்து மூலமாகவும், உரையாடல் மூலமாகவும், இலங்கைக்கு வரிச் சலுகையை தொடர்ந்து வழங்கலாமா? என ஆய்வு செய்து அறிக்கை சமர்பிக்க கொழும்பு வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய ஜீஎஸ்பி ப்ளஸ் கண்காணிப்பு குழுவினரிடம் நாம் நேரடியாக சமர்ப்பித்தோம். இந்த நிபந்தனைகளை திகதி குறித்து நிறைவேற்றினால் மாத்திரமே இலங்கைக்கு ஜிஎஸ்பி ப்ளஸ் வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய ஜிஎஸ்பி ப்ளஸ் வரிச் சலுகை கண்காணிப்புக் குழுவிற்கும், தமிழ் முற்போக்கு கூட்டணி குழுவிற்கும் இடையில் சந்திப்பு உரையாடல் கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதரகத்தில் 28 ஏப்ரல் 2025செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கூட்டணி சார்பில் தலைவர் மனோ கணேசன் எம்.பி, பிரதி தலைவர் வே.இராதாகிருஷ்ணன் எம்.பி, ஜனநாயக மக்கள் முன்னணியின் சர்வதேச விவகார உப தலைவர் பாரத் அருள்சாமி, ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் தூதுவர் கார்மென் மொரேனோ, அரசியல் செயலர், கரோலினா மற்றும் ஐந்து பேர் கொண்ட ஜிஎஸ்பி ப்ளஸ் கண்காணிப்பு ஆகியோரும் கலந்துரையாடலில் இடம் பெற்றனர்.

# ஸஹ்ரான் குழு:- கூலிக்கு சாகடிக்கும் கொள்கையற்ற கும்பலா?

இலங்கையில் 2019 இல் இடம்பெற்ற ஈஸ்டர் படுகொலை தாக்குதல்கள் குறித்த அரசாங்க தரப்பின் அடுத்தடுத்த அறிவிப்புக்களையும் அரசியல்வாதிகளின் கருத்துக்களை யும் படிக்கும் போது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வியட்



நாம் போர் நினைவுக்கு வருகிறது. இன்று போன்று இலகுவான, சக்தி வாய்ந்த தொழில்நுட்ப ஆயுதங்கள் இல்லாத அந்தச் சூழலில் வியட்நாமிய விடுதலைப் போராளிகள் அமெரிக்காவை எதிர்த்து போராடிய முறைகளில் இதுவும் ஒன்று.

அமெரிக்க டாங்கிகளையும், பாரிய படை நகர்வுகளையும் தவிர்க்க தகர்க்க போராளிகள் மாடுகளை தற்கொலை குண்டு தாரிகளாகப் பயன்படுத்திய தந்திரோபாயம் தான் அது. மாடுகளுக்கு சாராயத்தை பருக்கி போதையூட்டி டாங்கிகள், படைகளின் நகர்வுகளின் போது கட்டவிழ்த்து விட்ட போது மாடுகள் வெறி கொண்டோடி டாங்கிகளில் மோதி தற்கொலை தாக்குதலை மேற்கொண்டன. இந்த முறையானது பிற்காலத்தில் மிருகவதை எதிர்ப்பு அமைப்புக்களால் பெரும் கண்டனத்திற்குள்ளானது.

இன்று ஈஸ்டர் படுகொலைகள் விசாரணைகள் தொடர்பான செய்திகள் இதையே நினைவூட்டுகின்றன. தாங்கள் புனித மரணத்தை தழுவப் போகிறோம் என்று தெரிந்தும், அதற்கான குண்டுகளை சுமந்தும், அது வெடிக்கும் போது தான் மட்டும் அல்ல இயலுமானவரை அதிகமான மனிதர்களை கொல்ல வேண்டும் என்ற ஆவேசத்துடன் தற்கொலை தாக்குதல்களை சுயவிருப்பில் தேர்ந்தெடுத்தவர்களை. அதற்கான நீண்டகால பயிற்சிகளையும், தயாரிப்புக்களையும் செய்து தாக்குதல் நடாத்தியவர்களை. ஏதோ அப்பாவிகளாக வும் (?), அவர்களின் அப்பாவித்தனத்தை(?) அறியாமையை(?) யாரோ? தங்கள் அரசியல் தேவைகளுக்கு வஞ்சகமாக பயன்படுத்தி விட்டார்கள் என்ற பாணியில் கதைகள் சொல்லப்படுகின்றன.

ஸஹ்ரான் குழுவினர் என்ன? காசுக் காகவும் அல்லது வேறு வசதியான வாழ்க்கை, வெளிநாட்டில் குடியேறுதல் போன்ற ஆசை வார்த்தைகளை நம்பியா? மரித்தார்கள். பூசையில் கலந்து கொண்டுள்ள குழந்தைகளை யும், பெண்களையும், ஆண்களையும் கொல்ல எவ்வளவு மனத்தைரியம் மனவைராக்கியம் தேவை? இது அடிப்படையில் ஒரு இலட்சிய வெறியில் இருந்தே எழமுடியும்.

தற்கொலை குண்டுதாரிகள் சரி, பிழைக்கு அப்பால் அவர்கள் வரிந்து கட்டிக்கொண்ட இலட்சியத்திற்காக தங்களை தாங்களே வெடிக்கச்செய்து மாண்டுபோகின்றனர். இந்த தயார்படுத்தலுக்கு நீண்டகால மூளைச் சலவையும், இலட்சியம் மீதான வெறியும் தேவை. அந்த வெறி மதவெறியாகவோ, இனவெறியாகவோ, அதிகார வெறியாகவோ இருக்க முடியும். வேண்டுமானால் அவர்கள் சார்ந்த அரசியல் அதை மதம், இனம் மீதான பற்று – பக்தி எனவும் அவர்கள் தேச பக்தர்கள் எனவும், மாவீரர்கள் எனவும் பட்டம் சூட்டலாம். இதனால் தான் கார்ள் மார்க்ஸ் மதம் ஒரு அபின் என்றார் போலும். இந்த கொடூரமான தற்கொலை தாக்குதலகளை தமிழீழ விடுதலைப்புலிகளும் ஒரு கருவியாக பயன்படுத்தினர்.

முற்போக்கு எழுத்தாளர்(?) முருகையன் விடுதலைப்புலிகளின் தற்கொலை தாக்குதல்களை புகழ்ந்து குறள் வடிவில் ஒரு அதிகாரத்தை கூட எழுதியிருந்தார். அந்த அதிகாரத்தின் பெயர் தற்கொடை இது கரும்புலிகளுக்கு மட்டும் அல்ல ஐஎஸ்ஐஎஸ் குண்டு தாரிகளுக்கும் பொதுவானது தான்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வின் அரசாங்கம் ஈஸ்டர் படுகொலை தொடர்பான விசாரணைகளை பதவிக்கு வந்த ஆறு மாதங்களில் ஆரம்பித்துள்ளது. இதற்கு அரசாங்கத்தின் பக்கத்தில் உள்ள காற்று வளம் — இது தேர்தல் காலம் என்பதாகும். அடுத்தது பேராயர் ஈஸ்டர் தினத்தில் வீதியில் இறங்குவோம் என்று எச்சரித்தது. இதற்கு பதிலாக ஜனாதிபதி ஏப்ரல் 21ம் திகதியை பிரதான சூத்திரதாரியை அறிவிப்பதற்கான காலக்கெடுவாக அறிவித்திருந்தார். அது முடிந்து இரண்டு வாரத்தை தொடுகிறது. யாரையாவது திருப்பலி கொடுக்க வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இருக்கிறது.

ஏப்ரல் 8ம் திகதி பிள்ளையானும், பினனர் அவரின் சாரதியும் கைது செய்யப்பட்டதை தவிர எதுவும் நடக்கவில்லை. அதுவும் அவர்களின் கைது கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் எஸ். ரவீந்திரநாத் அவர்கள் கடத்தப்பட்டு, காணாமல் போனது தொடர்பானது என்று கூறப படுகிறது. தேர்தல் காலத்தில் அரசாங்கம் மேற்கொள்ளும் இந்த கைதுகளும், தடுத்து வைப்புக்களும் ஈஸ்டர் படுகொலைகள் அரசியல் மயமாக்கப்படுகின்றனவா? இந்த கைதுகள் அரசியல் பழிவாங்கலா? என்று சந்தேகங்களை எழுப்பியுள்ளன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையையும், பயங்கரவாத சட்டத்தையும் நீக்குவதாக மக்கள் வாக்குகளை பெற்ற ஜனாதிபதி அந்த அதிகாரங்களை தேர்தல் காலத்தில் பயன்படுத்துவது குறித்து சிவில் அமைப்புக்கள் பலவும் கண்டித்துள்ளன.

ஈஸ்டர் படுகொலைகள் குறித்து கடந்த கால இலங்கை அரசாங்கங்கள் மட்டும் அல்ல இந்தியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, டென்மார்க், நெதர்லாந்து, பிரிட்டன், துருக்கி, ஜப்பான், போர்த்துக்கல் , இஸ்ரேல் என்பனவும் ஒருங்கிணைந்த புலனாய்வை செய்துள்ளன. இந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் இத் தாக்குதல்களில் கொல்லப்பட்டதும் இதற்கு ஒரு காரணம். ஐ.எஸ். ஸஹ்ரான் குழுவே இத் தாக்குதலுக்கு பொறுப்பு என்று குடீஐ மற்றும் அவுஸ்திரேலிய, இந்திய விசாரணைகளில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இதற்கும் மேலாக இத்தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு உரிமை கோரியிருக்கிறது.

கொலையாளிகளின் படங்களை குழுவாக ஆயுதங்களுடன் தாக்குதல் உறுதிமொழியாக வெளியிட்டுள்ளது. கரும்புலிகள் தலைமையிடம் இருந்து விடைபெறும் இவ்வாறான படங்களை புலிகளும் தாக்குதல்களுக்கு பின்னர் வெளியிட்டனர். இந்த நிலையில் புலிகளின் படங்களையும், உரிமை கோரல்களையும் புலன் விசாரணைகளில் ஒரு ஆதாரமாக, சாட்சியமாக எடுத்துக 'கொண்ட அரசாங்கம் ஐ.எஸ். அமைப்பின் உத்தியோகபூர்வ தகவல்களை மறுதலித்து செயற்படுவது அநுர அரசாங்கம் தனக்கு வேண்டாத, அரசியல் எதிரியை தண்டிக்க ஆதாரம் தேடுகிறதா? என்ற சந்தேகம் தெற்கில் வலுக்க காரணமாகிறது..

பிரான்ஸ் 24 இன் ஊடகவியலாளர் குழு ஒன்று மாவனெல்லையில் புத்தர் சிலை தாக்கப்பட்ட பின்னர் அங்கு சென்று உள்ளூர் மக்களை சந்தித்தது. ஸஹ்ரானின் வேறு மீதே குற்றம் சாட்டப்பட்டிருந்தது. மந்தாகினி கஹ்போட், அல்பின் அல்பாரெஸ், தோமஸ் டெனிஸ், பிலோமின் ரெமி ஆகிய ஊடகவியலாளர்கள் இக்குழுவில் இருந்தனர். "இந்தக் குழுவின் இருப்பை நாம் அறிந்திருந் தோம். ஆனால் அவர்கள் இவ்வளவு ஆபத்தானவர்களாக இருக்கிறார்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை'' என்று உள்ளூர் வாசிகள் தெரிவித்தாக அந்த ஊடகவியலாளர்களின் அறிக்கை கூறுகிறது.

இதையொத்த கருத்துக்களையே ஈஸ்டர் படுகொலைகளுக்கு பின்னர் சாதாரண முஸ்லீம் பொதுமக்கள் குறிப்பாக காத்தான்குடி, சாய்ந்தமருது மக்கள் தெரிவித்திருந்தனர். நாட்டின் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகம் இந்தப் படுபாதகச் செயலை அங்கீகரிக்கவில்லை. ஆனால் முஸ்லீம்கள் மீதான புலிகளின் தாக்குதல்களின் போது தமிழர்கள் இந்தளவுக்கு மனிதாபிமானமற்ற அந்த நடவடிக்கைகளை பொதுமக்களாக வெளிப்படையாக கண்டிக்கவில்லை என்பது துரதிஷ்டம். தமிழ்ப்பிரதேச பல்கலைக்கழக சமுகங்கள் கூட ஒத்தோடின. இந்த ஒத்தோடல் கலாச்சாரத்தின் ஒரு பகுதியைத்தான் புலிகளின் பிரிவின்போது கிழக்கு பல்கலைக்கழகமும் அனுபவித்தது என்பதை மிக வருத்தத்துடன் பதிவிடவேண்டியுள்ளது.

அரசபயங்கரவாதம் வடக்கு, கிழக்கில் கட்டவிழ்த்து விட்ட வன்முறைகளையும் ஆகக்குறைந்த பட்சம் தமிழ் கிறிஸ்தவர்கள், தேவாலயங்கள் மீதான படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களையும் பேராயர் மல்கம் ரஞ்சித் கண்டு கொள்ளவில்லை. வடக்கு கிழக்கு கிறிஸ்தவர்களை அவர் தமிழர்களாகவும், பயங்கரவாதிகளாகவுமே இனம் கண்டிருந்தார். இது சிங்களவர்கள் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களை மட்டும் அவர் கண்டிக்க காரணமானது. ஐ.எஸ். பயங்கரவாதம் தங்கள் வீட்டுக் கதவைத் தட்டும் வரை ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தவர் அவர். இதனாலேயே வடக்கு கிழக்கை மையப்படுத்தி தமிழ் ஆயர்கள் அமைப்பு ஒன்று உருவாக வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. இந்தியா — இலங்கை இடையிலான பாலம் அமைப்பு செய்திவந்தவுடன் அரசியல்வாதிகளையும் விஞ்சி தனது சிங்கள தேசியப் பற்றை — விசுவாசத்தை வெளிக்காட்டியவர். எப்போதும் கோத்தபாய, ஜே.வி.பி. சிங்கள தேசியவாத கடும் போக்காளர்கள் பக்கமே அவர் தன்னை நிலைப்படுத்தினார்.

ஈஸ்டர் படுகொலை விசாரணைகள் அரசியல் தலையீட்டில் இருந்து விடுவிக்கப்படவேண்டியது முதல் நிபந்தனையாக அமையவேண்டும். தற்போது ஜனாதிபதியினால் அமைக்கப்பட்ட குழுவில் ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டுள்ள ஷானி அபயசேகர இடைநடுவில் உள்வாங்கப்பட்டிருப்பது மக்கள் மத்தியில் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் சுரேஷ் சாலே, அவருடன் தொடர்பிலும், தகவல் பரிமாற்றத்திலும், தரகராகவும் செயற்பட்ட அசாத் மௌலானா சனல் 4 க்கு வழங்கியுள்ள சுயசாட்சியம் விசாரணைக்குழுவால் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அவர் தனக்கு தெரிந்தவற்றில் விரும்பியவற்றை மட்டும் அள்ளிவீசி விட்டு தப்பி போகமுடியாது. இன்று இருப்பவர்களுள் கொலையாளிகளுடன் தொடர்பில் இருந்த ஒப்புதல் வாக்குமூலம் அசாத் மௌலானாவுடையது.

யார் அந்த ஹிந்தி அபு? அவர் இந்திய புலனாய்வு அதிகாரின் உதவியுடன் விசாரணைக்கு உட்படுத்தப்படமுடியும். இந்திய புலனாய்வு துறையின் தகவல்களை உதாசீனம் செய்தவர்கள், தகவல்களை தொடர்ந்தும் ஜனாதிபதிக்கும், அமைச்சர்களுக்கும் வழங்காதவர்கள் உள்ளிட்ட (22ம் பக்கம் பார்க்க)

# இந்தியா - பாகிஸ்தான் இராணுவ வலிமை யாருக்கு அதிகம்? அணு ஆயுதம் யாரிடம் எவ்வளவு உள்ளது?

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு இந்தியா, பாகிஸ்தான் இடையிலான பதற்றம் உச்சத்தில் உள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான சிந்து நதி ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்தல், அட்டாரி-வாகா எல்லையை மூடுவது, பாகிஸ்தான் குடிமக்களின் விசாக்களை ரத்து செய்வது போன்ற பல முடிவுகளை இந்தியா எடுத்தது.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக பாகிஸ்தான் 1972ஆம் ஆண்டு கையெழுத்தான சிம்லா ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக அறிவித்தது. மேலும் நதிகளின் நீரைத் தடுக்கவோ அல்லது திசை திருப்பவோ செய்யும் எந்த முயற்சியும் 'போர் நடவடிக்கையாக' கருதப்படும் என்றும், அதற்கு முழு பலத்துடன் பதிலடி கொடுக்கப்படும் என்றும் பாகிஸ்தான் அரசு தெரிவித்தது.

இரு நாடுகளின் அரசியல் தலைமையும் பரஸ்பரம் பதிலடி கொடுக்கும் விதமாகக் கடுமையான எச்சரிக்கைகளையும், காட்டமான கருத்துகளையும் தெரிவித்து வருகின்றனர்.

பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு முதல் முறையாக கடந்த வியாழக்கிழமை (ஏப்ரல் 24) பொது மக்கள் மத்தியில் பேசிய பிரதமர் நரேந்திர மோதி 'இந்தத் தாக்குதலுக்குக் காரணமான தீவிரவாதிகள் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு மோசமான தண்டனையைப் பெறுவார்கள்' என்றார்.

ஒவ்வொரு தீவிரவாதியையும், அவர்களுக்கு ஆதரவளிப்பவர்களையும் இந்தியா அடையாளம் கண்டு தண்டிக்கும் என்ற செய்தியை நான் முழு உலகுக்கும் தெரிவிக்கிறேன். எஞ்சியுள்ள தீவிரவாதிகளை மண்ணோடு மண்ணாக அழிக்கும் நேரம் தற்போது வந்து விட்டது' என்றும் மோதி குறிப்பிட்டார்.



பாகிஸ்தானுக்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட கிடைக்காதபடி உறுதி செய்வதற்கான ஓர் உத்தி வகுக்கப்படுகிறது' என்று இந்தியாவின் நீர்வளத்துறை அமைச்சர் சி.ஆர். பாட்டீல் கூறினார்.

பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீப், இந்தியாவின் எந்தவொரு நடவடிக்கைக்கும் வலுவான பதிலடி கொடுப்பதாகத் தெரிவித்த அதே வேளையில், பாகிஸ்தானின் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா ஆசிப் பிபிசிக்கு அளித்த பேட்டியில், 'சிந்து நதிநீர் ஒப்பந்தம் தொடர்பான எந்தவொரு நடவடிக்கையும் போர் அறிவிப்பாகக் கருதப்படும்' என்று வலியுறுத்தினார்.

## இந்திய இராணுவத்தின் வலிமை

இராணுவ வலிமை குறித்த 2025 ஆம் ஆண்டுக்கான தரவரிசையில் பாகிஸ்தான் இந்தியாவை விட 8 இடங்களில் பின் தங்கியுள்ளது என்று குளோபல் ஃபயர் பவர் இணையதளத்தில் உள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

உலகளாவிய இராணுவ சக்தியைப் பொறுத்தவரை, 2025ஆம் ஆண்டில் 145 நாடுகளில் இந்தியா 4வது இடத்தில் இருக்கிறது, பாகிஸ்தான் 12வது இடத்தில் இருக்கிறது.

இந்திய இராணுவத்திடம் சுமார் சுமார் 22 லட்சம் இராணுவ வீரர்கள், 4,201 டாங்கிகள், 1.5 லட்சம் கவச வாகனங்கள், 100 சுயமாக இயக்கப்படும் பீரங்கிகள் மற்றும் 3,975 இழுத்துச் செல்லக்கூடிய பீரங்கிகள் உள்ளன. இது தவிர, 264 பீப்பாய் ராக்கெட் பீரங்கிகளும் இருக்கின்றன.

இந்திய விமானப் படையில் 3 லட்சத்து 10 ஆயிரம் விமானப்படை வீரர்கள், 513 போர் விமானங்கள், 270 போக்குவரத்து விமானங்கள் உள்பட மொத்தம் 2,229 விமானங்கள் இருக்கின்றன. மொத்த விமானங்களில் 130 தாக்குதல் விமானங்கள், 351 பயிற்சி விமானங்கள், 6 டேங்கர் கடற்படை விமானங்கள் ஆகியவை அடங்கும்.

இந்திய இராணுவத்தின் மூன்று பிரிவுகளும் வைத்திருக்கும் மொத்த ஹெலிகாப்டர்களின் எண்ணிக்கை 899. அவற்றில் 80 ஹெலிகாப்டர்கள் தாக்குதல் நடத்த வல்லவை.

இந்திய கடற்படையில் 1.42 லட்சம் கடற்படை வீரர்கள் உள்ளனர். மேலும் 2 விமானம் தாங்கிக் கப்பல்கள், 13 டெஸ்டிராயர் எனப்படும் அழிக்கும் கப்பல்கள், 14 போர்க்கப்பல்கள், 18 நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் 18 சிறிய போர் கப்பல்கள் உள்பட மொத்தம் 293 கப்பல்கள் உள்ளன.

தளவாட வசதிகளைப் பொறுத்தவரை, இந்திய இராணுவத்திடம் 311 விமான நிலையங்கள், 56 துறைமுகங்கள், 6.3 மில்லியன் கிலோமீட்டர் நீளத்திற்கு சாலைகள் மற்றும் 65,000 கிலோமீட்டர் ரயில் பாதைகள் இருக்கின்றன.

## பாகிஸ்தான் இராணுவத்தின் வலிமை

குளோபல் ஃபயர் பவர் இணையதளத் தரவுகளின்படி, பாகிஸ்தான் இராணுவத்தில் சுமார் 13.11 லட்சம் ராணுவ வீரர்களும், 1.24 லட்சம் கடற்படை வீரர்கள் மற்றும் 78 ஆயிரம் விமானப் படை வீரர்கள் உள்ளனர்.

பாகிஸ்தானிடம் மொத்தம் 1,399 விமானங்கள் உள்ளன, அவற்றில் 328 போர் விமானங்கள், 90 தாக்குதல் வகைகள், 64 போக்குவரத்து விமானங்கள், 565 பயிற்சி விமானங்கள், 4 விமானம் தாங்கி கப்பல்கள், தாக்குதல் நடத்த வல்ல 57 ஹெலிகாப்டர்கள் உள்பட 373 ஹெலிகாப்டர்கள் ஆகியவை அடங்கும்.

மேலும் அந்நாட்டு ராணுவத்திடம் 2,627 டாங்கிகள், 17,500 வாகனங்கள், 662 சுயமாக இயக்கப்படும் பீரங்கிகள், 2,629 இழுத்துச் செல்லப்பட்டும் பீரங்கிகள் மற்றும் 600 மல்டிபேரல் ராக்கெட் பீரங்கிகள் ஆகியவை இருக்கின்றன.

பாகிஸ்தான் கடற்படையிடம் 9 போர்க் கப்பல்கள், 9 சிறிய போர்க் கப்பல்கள் (corvettes), 8 நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் 69 ரோந்து கப்பல்கள் உள்பட மொத்தம் 121 போர்க் கப்பல்கள் உள்ளன.

தளவாடங்களைப் பொறுத்தவரை, பாகிஸ்தானிடம் மூன்று துறைமுகங்கள், 116 விமான நிலையங்கள் மற்றும் 60 வணிகக் கப்பல் படை மட்டுமே இருக்கின்றன. இது தவிர, 2 லட்சத்து 64 ஆயிரம் கிலோமீட்டர் சாலைகளும் 11 ஆயிரத்து 900 கிலோமீட்டர் ரயில் பாதைகளும் பாகிஸ்தானிடம் உள்ளன.



## யாரிடம் எவ்வளவு அணு ஆயுதங்கள்!

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஒரு சிந்தனைக் குழுவான ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) 2024ஆம் ஆண்டுக்கான அறிக்கைப்படி, இந்தியாவில் 172 அணு ஆயுதங்களும், பாகிஸ்தானிடம் 70 அணு ஆயுதங்களும் இருக்கின்றன.

இருப்பினும், இரு நாடுகளும் எத்தனை அணு ஆயுதங்களை நிலை நிறுத்தியுள்ளன என்பது தெளிவாக இல்லை. இந்தியாவை எதிர்கொள்ள பாகிஸ்தான் அணு ஆயுதங்களை உருவாக்கி வருகிறது. அதே நேரத்தில், இந்தியா நீண்ட தூர ஆயுதங்களை நிலை நிறுத்துவதில் கவனம் செலுத்துகிறது. அதாவது, அந்த ஆயுதங்களால் சீனாவையும் தாக்க முடியும் என்று அந்த சிந்தனைக் குழு குறிப்பிட்டுள்ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தானின் அண்டை நாடாகவும், உலகின் மூன்றாவது பெரிய அணுசக்தி நாடாகவும் இருக்கும் சீனா, அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை 410 போர்முனைகளில் இருந்து 500 ஆக 22 சதவீதம் அதிகரித்துள்ளது.

## டிரோன்களின் எண்ணிக்கை

கடந்த ஆண்டு நவம்பரில் பிபிசி உருது சேவை செய்தியாளர் ஷகீல் அக்தர் எழுதிய கட்டுரையின்படி, இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் டிரோன்களின் எண்ணிக்கையை வேகமாக அதிகரித்து வருகின்றன. அடுத்த இரண்டு முதல் நான்கு ஆண்டுகளில் இந்தியாவிடம் சுமார் 5,000 டிரோன்கள் இருக்கும் என்று பாதுகாப்பு ஆய்வாளர் ராகுல் பேடி கூறுகிறார்.

பாகிஸ்தானிடம் இந்தியாவை விட குறைவான டிரோன்கள் இருந்தாலும், அந்நாடு வைத்திருக்கும் டிரோன்கள் வெவ்வேறு திறன்களைக் கொண்டவை. மேலும் அவை 10 முதல் 11 விதமான தயாரிப்புகளைச் சேர்ந்தவை' என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில், 3.5 பில்லியன் டாலர் மதிப்புள்ள 31 பிரிடேட்டர் டிரோன்களை வாங்க அமெரிக்காவுடன் இந்தியா ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. உலகின் மிக வெற்றிகரமான மற்றும் ஆபத்தான டிரோன்களாக பிரிடேட்டர் டிரோன்கள் கருதப்படுகின்றன. மேலும் இலக்குகளை அழிக்கக்கூடிய 500 மில்லியன் டாலர் மதிப்புள்ள டிரோன்களும், லேசர் மூலம் கட்டுப்படுத்தப்படும் ஏவுகணைகளும் வாங்கப்பட்டன.

துருக்கி மற்றும் சீனாவில் இருந்து, பாகிஸ்தான் டிரோன்களை இறக்குமதி செய்கிறது. அதோடு, அந்நாடு ஜெர்மனி மற்றும் இத்தாலியில் இருந்தும் டிரோன்களை வாங்கியுள்ளது' என்று ராகுல் பேடி கூறுகிறார்.

இவற்றோடு, பாகிஸ்தான் பராக் மற்றும் ஷாபர் என்ற டிரோன்களையும் உருவாக்கியுள்ளது. பாகிஸ்தானிடம் துருக்கியின் நவீன 'பைராக்டர்' வுட2 மற்றும் அகின்ஜி டிரோன்கள் உள்ளன. மேலும், சீனாவிடம் இருந்து விங் லோங் 2, சிஹெச்-4 போன்ற டிரோன்களையும் வாங்கியுள்ளது

நன்றி:- பிபிசி

| இந்தியா | | பாகிஸ்தான் |
|---|---|---|
| 2,229 | மொத்த விமானங்கள் | 1,399 |
| 513 | போர் விமானங்கள் | 328 |
| 80 | தாக்குதல் ஹெலிகாப்டர்கள் | 57 |
| 1,48,594 | கவச வாகனங்கள் | 17,516 |
| 4,201 | டாங்கிகள் | 2,627 |
| 18 | நீர்மூழ்கிக் கப்பல்கள் | 8 |

# கனடாவின் பிரதமர் மார்க் கார்னி இந்தியாவுடனான அணுகுமுறையில் ட்ரூடோவில் இருந்து எப்படி மாறுபட்டவர்?

கனடாவின் அரசு செய்தி ஊடகமான சிபிசி நியூஸின் கூற்றுப்படி, மார்க் கார்னியின் லிபரல் கட்சி நாட்டின் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது. ஆனால், பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்கத் தேவையான 172 இடங்களை அந்தக் கட்சி பெறுமா அல்லது வேறு கட்சியின் ஆதரவைப் பெற வேண்டுமா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

மார்க் கார்னி தமது வெற்றி உரையில், 'நம் மீது ஆதிக்கம் செலுத்தும் வகையில் அமெரிக்க அதிபர் டிரம்ப் நம்மை உடைக்க முயற்சிக்கிறார். அது ஒரு போதும் நடக்காது' என்று கூறினார் .மேலும் அமெரிக்காவுடனான எங்கள் பழைய உறவு இப்போது முடிந்து விட்டது. அமெரிக்கா செய்த துரோகத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியை நாங்கள் கடந்துவிட்டோம்' என்றார்.

மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்த தேர்தல்களில் லிபரல் கட்சி மிகவும் பின்தங்கியிருந்தது, ஆனால் அமெரிக்காவுடன் வளர்ந்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில் மார்க் கார்னி கட்சியைக் கைப்பற்றினார். இதன் பிறகு, அக்கட்சியின் பிரசாரத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், கனடாவின் பிரதமராக ஒன்பது ஆண்டுகள் பதவி வகித்த ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகியதை அடுத்து, மார்க் கார்னி லிபரல் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிரதமரானார். ஜஸ்டின் ட்ரூடோவின் பதவிக் காலத்தில், இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான உறவுகளில் மிகுந்த பதற்றம் நிலவியது, மேலும் இரு நாடுகளும் தங்கள் ராஜ்ஜீய உறவுகளை கணிசமாகக் குறைத்திருந்தன.

### வெற்றிக்கு வழிவகுத்த டிரம்பின் கருத்துக்கள்

பிபிசி செய்தியாளர் ஆண்டனி ஜெர்க்கரின் கூற்றுப்படி, டொனால்ட் டிரம்பின் கொள்கைகளும் லிபரல் கட்சியின் வெற்றியில் ஒரு பங்கைக் கொண்டிருந்தன. டிரம்ப் பலமுறை கனடாவைத் தூண்டி விட்டு, அதை அமெரிக்காவின் 51வது மாநிலமாக மாற்றுவதாக குறிப்பிட்டார், இது கனட வாக்காளர்களை ஒன்றிணைத்தது என்று அவர் கருதுகிறார்.

கனடா அரசியலில் லிபரல் கட்சி கடந்த சில மாதங்களாக மிகுந்த அழுத்தத்தில் உள்ளது. சில மாதங்களுக்கு முன்பு வரை கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துவிட்டது என்று கருதப்பட்ட அக்கட்சி, இப்போது நான்காவது முறையாக ஆட்சி அமைப்பதற்கான சூழலில் உள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதத் தொடக்கத்தில், தனது சொந்தக் கட்சியில் அழுத்தம் அதிகரித்து வந்ததால், ஜஸ்டின் ட்ரூடோ தேர்தலுக்கு சற்று முன்பு பிரதமர் பதவியில் இருந்து ராஜினாமா செய்தார்.

கனடாவின் பொறுப்பை கார்னி ஏற்றுக் கொண்டதிலிருந்து, அவருக்கு முன்பு பதவி வகித்த ட்ரூடோவுடன் ஒப்பிடும் போது இந்தியாவுடனான உறவுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக ஆண்டனி ஜெர்க்கர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான உறவை 'மிக முக்கியமானது' என்று திங்களன்று கனடாவின் முன்னாள் வங்கியாளரும், பிரதமராக தேர்வாகி உள்ள மார்க் கார்னி விவரித்தார்.

மேலும் அவர் மீண்டும் பிரதமரானால், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்த முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டார்.




### இந்தியாரவப் பற்றி கார்னியின் கருத்துக்கள் என்ன?

சனிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது கனடாவின் சேனல் ஒய் மீடியாவின் கேள்விக்கு பதிலளித்த கார்னி ,

இந்தியாவுடனான உறவில் பதற்றம் இருப்பது தெளிவாகிறது, ஆனால் அது நம்மால் அல்ல. ஒருவருக்கொருவர் மரியாதையுடன் அதை மீண்டும் கட்டியெழுப்புவதே முன்னோக்கி செல்லும் வழி' என்றார் .

ஆட்சிக்கு வந்தால் இந்தியா-கனடா உறவுகளை மேம்படுத்த என்ன செய்வீர்கள் என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையிலான உறவு பல நிலைகளில் மிகவும் முக்கியமானது. தனிப்பட்ட உறவுகள், பொருளாதார மற்றும் மூலோபாய துறைகளிலும் கூட முக்கியமானது. இந்தியாவுடன் தனிப்பட்ட உறவுகளைக் கொண்ட பல்வேறு மக்கள் கனடாவில் உள்ளனர்.

உலகப் பொருளாதாரம் ஆட்டம் கண்டு புதிய வடிவம் பெறும் இந்த நேரத்தில், இந்தியா மற்றும் கனடா போன்ற நாடுகள் மிகப் பெரிய பங்கை வகிக்க முடியும் என்பதை எனது அனுபவத்திலிருந்து நான் கூறுகிறேன்,' என்று அவர் பதிலளித்தார். வர்த்தகப் போர் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது என்றும் மார்க் கார்னி கூறினார்.

வணிகப் போர் போன்ற எதிர்மறையாக நடந்த சம்பவங்கள், வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளன என்று நான் நினைக்கிறேன். பிரதமராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டால், அந்த வாய்ப்புகளில் ஒன்றாக இதை எடுத்துக் கொண்டு செயல்பட விரும்புகிறேன்,' என மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை வாக்கெடுப்புக்கு சற்று முன்பு வெளியிடப்பட்டது. மேலும் இது கார்னியின் அரசாங்கம் இந்தியாவுடனான அதன் உறவுகளில் என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகிறது என்பதற்கான ஒரு முக்கிய அறிகுறியாகவும் உள்ளது. ஆனால் கார்னி இது போன்ற கருத்தை தெரிவிப்பது முதல் முறை அல்ல.

கடந்த மார்ச் மாதம், அவர் லிபரல் கட்சியின் தலைவராகும் போட்டியில் இருந்த போது இந்தியாவுடனான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது' பற்றிப் பேசியிருந்தார் .

மார்க் கார்னி பிரதமரானால், இந்தியாவுடனான வர்த்தக உறவுகளை மீட்டெடுப்பதாகக் கூறியிருந்தார். ஒத்த எண்ணம் கொண்ட நாடுகளுடன் கனடாவின் வர்த்தக உறவுகளைப் பன்முகப்படுத்துவது குறித்தும் அவர் பேசினார்.

ஒத்த எண்ணம் கொண்ட நட்பு நாடுகளுடன் தனது வர்த்தக உறவை பன்முகப்படுத்த கனடாவுக்கு ஒரு வாய்ப்பு உள்ளது. இந்தியாவுடனான நமது உறவை மீண்டும் கட்டியெழுப்ப நமக்கு ஒரு வாய்ப்பு உள்ளது.

அந்த வணிக உறவைச் சுற்றி பகிரப்பட்ட மதிப்பு உணர்வு இருக்க வேண்டும், நான் பிரதமரானால் அந்த வாய்ப்பை எதிர்நோக்கி உள்ளேன்,' என்று கார்னி கூறினார். மார்ச் மாதத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தின் போது, 'கனடாவுக்கு புதிய நண்பர்கள் மற்றும் கூட்டாளிகள் தேவை' என்று அவர் கூறியிருந்தார். இது தொடர்பாக, அவர் இந்தியாவைக் குறிப்பிட்டிருந்தார்.

கனடாவில் உள்ள இந்திய மக்களுடன் தொடர்பு கொள்வதில் மார்க் கார்னி நம்பிக்கை கொண்டுள்ளார். இந்த மாதம் ஏப்ரல் 6 ஆம் தேதி, அவர் டொராண்டோவில் உள்ள ஒரு இந்து கோவிலுக்குச் சென்று, ராம நவமி அன்று மக்களை வாழ்த்தினார். இந்த மாதம் ஏப்ரல் 14 ஆம் தேதி, பைசாக்கிக்கு வாழ்த்து தெரிவிக்க ஒட்டாவா சீக்கிய சங்க குருத்வாராவுக்குச் சென்ற கார்னி, அதன் படங்களை தனது எக்ஸ் கணக்கில் பகிர்ந்து கொண்டார்.

### மார்க் கார்னி யார்?

இங்கிலாந்து வங்கியின் முன்னாள் ஆளுநராக இருந்தவர் மார்க் கார்னி .மத்திய வங்கியின் 300 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றில், உயர் வங்கிப் பொறுப்பை வகித்த முதல் பிரிட்டன் அல்லாதவராகவும் கார்னி உள்ளார்.

2008 நிதி நெருக்கடியின் போது கனடா வங்கியின் ஆளுநராக தனது நாட்டை அவர் முன்னர் வழிநடத்தினார். பெரும்பாலான பிரதமர் வேட்பாளர்களைப் போல் அல்லாமல், கார்னி இதற்கு முன்பு ஒருபோதும் அரசியல் பதவிகளை வகித்ததில்லை. இருப்பினும், கடந்த மார்ச் மாதம் வெளியேறும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை மாற்றுவதற்கான லிபரல் கட்சியின் தேர்தலில் அவர் எளிதாக வெற்றி பெற்றார். இப்போது அவர் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு மீண்டும் பிரதமராக உள்ளார்.

உலகளாவிய பொருளாதார நெருக்கடிகளைக் கையாண்டதில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பற்றி பெருமையாகக் கூறியுள்ள கார்னி, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பை எதிர்த்து நிற்கக்கூடிய தலைவராக கனடா மக்களால் பார்க்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகம் முழுவதும் பயணம் செய்து, நியூ யார்க், லண்டன் மற்றும் டோக்கியோ போன்ற இடங்களில் அவர் பணி புரிந்துள்ளார். மேலும் அவர் ஐரிஷ் மற்றும் கனேடிய குடியுரிமை இரண்டையும் பெற்றுள்ளார்.

2018ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் குடியுரிமையைப் பெற்ற கார்னி, சமீபத்தில் (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இந்து சமுத்திரப் பிராந்தியப் பதட்ட நிலையும் இலங்கைக்கான சவால்களும்

ஆசியாவின் சுவிஸ்சர்லாந்து என அழைக்கப்படும் காஷ்மீர் பள்ளத்தாக்கு சுற்றுலாப் பிரதேசமான பகங்காமின் கடந்த செவ்வாய்கிழமை லஷ்கர் இ தொய்பா என்ற காஷ்மீர் தீவிரவாத அமைப்பு 26 சுற்றுலாக்காரர்களை சுட்டுக் கொண்டுள்ளது. இது இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.




காஷ்மீர் விடயத்தில் இந்தியா சுதந்திரமடைந்த நாளிலிருந்து (75 ஆண்டுகளாக) மோதல் நிலவி வருவது உலகறிந்த விடயம். காஷ்மீர் விடுதலை போரும் பல ஆயுதப் போராட்ட அமைப்புகளுக்கு பாகிஸ்தான் 75 ஆண்டு காலமாக பயிற்சிகள் வழங்கி இந்தியாவிற்குள் அனுப்பி பல்வேறு காலகட்டங்களில் பெரியதும் சிறியதுமான தாக்குதல்களை நடத்தி வருவதும் இந்தியா பதில் நடவடிக்கைகள் எடுத்து வருவதும் அனைவரும் அறிந்ததே.

மேற்கண்ட பாகிஸ்தான் பயிற்சியளித்து அனுப்பிய லக்ஷர் இ தொய்பா இயக்கத்தின் சுற்றுலா மக்கள் மீதான தாக்குதலுக்கு இந்தியா கொடுத்துள்ள பதிலடி யாரும் எதிர்பார்க்காத ஒன்று.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தானூடாக பாயும் சிந்து நதியை இந்தியா தடுக்காதிருப்பதற்கான ஒப்பந்தம் 1960களில் ஐ.நா. மேற்பார்வையின் கீழ் கையெழுத்தானது. சிந்து நதி நீர் பாகிஸ்தானை பொறுத்தவரை பெருமளவு மக்களுக்கான குடிநீராகவும் விவசாயத்திற்கான முதுகெலும்பாகவும் இருந்து வருகின்றது.

இந்நிலையில் நடைபெற்ற இத்தாக்குதலுக்கு பதிலடியாக சிந்துநதி நீர் ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக இந்தியா அறிவித்துள்ளது. மேலும் 26 நாடுகளின் இராஜதந்திரிகளை அழைத்து தமது இந்த முடிவுக்கு பாகிஸ்தானே முழுப் பொறுப்பும் என்ற விளக்கத்தை வெளியுறவுத்துறை விளக்கப்படுத்தியுள்ளது. முக்கிய நாடுகளின் இராஜதந்திரிகளுடனான சந்திப்புகளை வெளியுறவுத்துறை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வறிவிப்பைத் தொடர்ந்து பாகிஸ்தான் பங்குச்சந்தை வேகமாக சரிந்து வருகிறது. சிந்துநதி நீர்த் தடை என்பது பாகிஸ்தானின் உள்நாட்டு உற்பத்தியில் மட்டும் 30 வீதம் வரையில் வீழ்ச்சி காணும் என பாகிஸ்தானிய பொருளியல் வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பெரியளவிலான தண்ணீர்ப் பஞ்சம் உட்பட சங்கிலித் தொடராக பாரிய பொருளாதாரத் தாக்கத்தை பாகிஸ்தான் சந்திக்க இருப்பதாக சர்வதேச பொருளியல் அறிஞர்கள் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். ஏற்கனவே இலங்கையைப் போன்றே கடுமையான பொருளாதார நெருக்கடியில் மூழ்கியிருக்கும் பாகிஸ்தானுக்கு இந்தியாவின் பதிலடி பாரிய தாக்கத்தை தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்தியாவிற்கு பதிலடி கொடுக்கிறோம் என்ற வகையில் பெருமளவு இந்திய ராஜதந்திரிகளை பாகிஸ்தானை விட்டு வெளியேறுமாறு பாகிஸ்தான் உத்தர விட்டுள்ளது. இதை இந்தியாவும் இரத்தத்திற்கு இரத்தம் என்ற வகையில் கையாளும் என எதிர்பார்க்கலாம்.

முற்றி வரும் இந்த முறுகல் நிலை சர்வதேச அளவிலும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு மேல் செல்லாமல் அதிகபட்ச பொறுமையை இரு தரப்பும் கடைப்பிடிக்குமாறு ஐ.நா.சபை செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். சிந்துநதி நீர் விடயம் தமக்கு அறிவிக்கப்படவில்லையென உலக வங்கி கூறியுள்ளது.

இரண்டு நாடுகளும் அணுவாயுதத்தை தம்வசம் கொண்ட நாடுகள் என்ற வகையில் இம்மோதல் வெடித்தால் இப்பிராந்தியத்திற்கு ஏற்படக் கூடிய பாரிய அபாயங்களையும் அலட்சியம் செய்து விட முடியாது. மொத்தத்தில் இந்தியாவின் நகர்வுகள் பாகிஸ்தானின் அடிமடியில் கை வைத்துள்ளமையும் பாகிஸ்தான் அதனை கையாள வல்லமையுள்ளதா? என்ற கேள்வியும் எழுகின்றது.

ஐ.நா. சபையின் மேற்பார்வையின் கீழ் கையெழுத்திடப்பட்ட சிந்துநதி நீர் ஒப்பந்தத்தை ஒரு தலைப்பட்சமாக மீறி தற்காலிகமாக இந்தியா நிறுத்தி வைத்திருப்பதானது தன்னைச் சூழவுள்ள நாடுகள் தனது நலன்களை மதிக்காமல் செயற்பட்டால் என்னாகும் என்ற எச்சரிக்கையை விடுப்பதாகவும் நோக்க முடியும்.

பங்களாதேஷில் ஷேக் கஷினாவை வெளியேற்றிய சக்திகளும் இந்திய எதிர் நிலைப்பாட்டை கொண்டுள்ளன. இலங்கையின் முன்னைய ஆட்சியாளர்கள் ஒன்றில் சீன சார்பாகவோ அல்லது அமெரிக்க சார்பாகவோ தான் உண்மையாக செயற்பட்டார்களே ஒழிய இந்தியாவின் நண்பர்களாக செயற்படவில்லை. வேறு வழியின்றி இந்தியாவிடம் அடங்கிப் போக வேண்டிய நிர்ப்பந்தத்திலேயே இருந்தனர்.

இன்று தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி.) என்ற பெயரில் ஆட்சி நடத்தும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) இந்திய எதிர்ப்பு வாதத்தை தமது அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகக் கொன்றது.

இந்திய விஸ்தரிப்பு வாதம் என்பதே அதன் சாராம்சமாகும். இந்திப் பிராந்தியத்தில் (தெற்காசியா) இந்தியா நிலப் பரப்பிலும் சரி மக்கள் தொகையிலும் சரி பொருளாதார வளத்திலும் சரி தொழில் நுட்பத்திலும் சரி பிராந்திய நாடுகளின் ஒட்டுமொத்தப் பலத்திற்கும் மேலானது.

அதேவேளை இப்பிராந்திய நாடுகள் அனைத்தும் மொழியாலோ மதத்தாலோ ஏனைய கலாசாரப் பின்னணிகளாலோ இந்தியாவுடன் பின்னிப் பிணைந்தவை எனவே இவற்றைப் பயன்படுத்தி இந்தியா படிப்படியாக இலங்கை உட்பட இப்பிராந்திய நாடுகளை ஆக்கிரமிக்கும். எனவே இந்தியா இலங்கையின் இறைமைக்கு ஆபத்தானது. தமிழர்கள் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் இலங்கை முகவர்கள். எனவே தமிழர்களும் இலங்கையின் இறையாண்மைக்கு ஆபத்தானவர்கள். இது ஜே.வி.பி.யின் அடிப்படைக் கொள்கை. இதனால்தான் ஜே.வி.பி. நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாக இந்திய எதிர்ப்பு ஓலங்களை ஆரம்பத்திலிருந்தே எழுப்பி வந்தது. அதேவேளை ஜே.வி.பி. ஓர் வலுவான சீன சார்ப்பு கட்சி என்பதும் இன்று அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு பின்பலமாக சீனாவே செயற்பட்டது என்பதும் அறிந்ததே.

அண்மையில் இந்தியப் பிரதமர் மோடி விஜயத்தின் போது சில புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்தானது. மோடிக்கு அதியுயர் தேச மித்திர விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இலங்கை மண்ணை இந்திய நலனுக்கெதிராக பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என ஜனாதிபதி அனுரகுமார பேசியிருந்தார்.

ஆட்சியில் இருப்பதனால் இந்தியாவை மகிழ்விப்பதற்கும் தமது ஆட்சிக்கு பங்கம் வந்து விடாமல் பார்க்கவும் விருதுகள் அறிக்கைகள் பயன்படலாம். ஆனால் இந்தியாவின் தேவை அதன் பல்வேறு திட்ட முன்மொழிவுகளை செயல் வடிவம் பெற வைப்பதே. இலங்கை முன்னைய ஆட்சியாளர்களும் சரி தற்போதை ஆட்சியாளர்களும் சரி இந்திய திட்ட முன்மொழிவுகளை இழுத்தடிப்பது தொடர்கிறது. அதேவேளை இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரி வருகிறது. இது 13வது திருத்தத்திற்கு மேலாக வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்பையும் உள்ளடக்கிய


**கட்டுரையாளர்**
**கொழும்பில் இருந்து**
**பேரா. சர்வேஸ்வரன்**




கோரிக்கையாகும். இந்த விடயத்திலும் முன்னைய ஆட்சியாளர் காலம் கடத்தினர். தற்போதைய ஆட்சியாளர் இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக தென்னிலங்கை முழுவதும் வன்முறைப் போராட்டம் நடத்தி 60 ஆயிரம் பேர் கொல்லப்பட காரணமானவர்கள். 13வது திருத்தத்தையே நடைமுறைப்படுத்த விருப்பமற்றவர்கள் இணைந்திருந்த வடக்கு — கிழக்கை பிரித்தவர்கள் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவார்கள் என்றோ அரசியல் யாப்பில் முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்பதன் மூலம் பொலிஸ், காணி அதிகாரத்தையும் வழங்குங்கள் என்ற இந்தியாவின் கோரிக்கையும் ஜே.வி.பி. ஆட்சியாளருக்கு வெறுப்பேற்றும் விடயமாகும்.

எனவே இந்திய நலன்களுக்கு இலங்கை இடையூறும் நிலை ஏதேனும் வகையில் ஏற்பட்டால் மட்டுமல்ல இந்தியாவின் திட்ட முன்மொழிவுகளை இலங்கை பின்னடிக்கும் அல்லது நிராகரிக்கும் பட்சத்தில் இந்தியா இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கு காட்டிய சமிக்ஞைகள் போலவோ சற்று மேலாகவோ காட்டக்கூடும். உதாரணமாக கச்சதீவு விடயம் இரு தரப்பு ஒப்பந்தமே. இந்தியா கச்சதீவில் தனது கடற்படையை நிலை கொள்ள வைப்பது கடினமானதல்ல. அதன் மூலம் அது இலங்கையை கையாளவும் முடியும். உள்நாட்டு அரசியலில் பலம் பெறவும் முடியும். எனவே சிந்துநதி நீர் ஒப்பந்த நிறுத்தி வைப்பானது கச்சதீவு ஒப்பந்தத்திற்கும் ஏற்படலாம். அதுமாத்திரமன்றி இனமோதல் தீர்வின் மீதும் அது தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

பிராந்திய சர்வதேச அரசியல் காலநிலைகள் எப்போது எவ்வாறு மாறும் என்று கூற முடியாது. ஆனால் அது எப்போது எவ்வாறு மாறினாலும் இனமோதல் தீர்விற்கு சார்பாக அம்மாற்றங்களை கையாள தமிழ்த் தலைமைகள் தயாராக இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் இத்தகைய உருப்படியான அரசியல் தூரப்பார்வையுடனான வெளிப்பாடான கலந்துரையாடல்களோ கொள்கைத் திட்டங்களோ அன்றி துரோகிகள் தியாகிகள் பட்டங்கள் வழங்கும் நிறுவனங்களாகவும் கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறியும் குறுகிய கூட்டத்திலான சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களையுமே சில கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

யுத்த காலங்களில் எமது விடுதலை அல்லது அதிகாரப்பகிர்வு நோக்கிய பல சந்தர்ப்பங்கள் பயன்படுத்தப்படவில்லை. இனி மேலும் அவ்வாறு இருப்பது எம்மினத்தின் ஒட்டுமொத்த அழிவிற்கே இட்டுச்செல்லும். ஒருவர் மீது ஒருவர் பழிசொல்லவும் இழிவான பிரச்சாரங்கள் மேற்கொள்ளவும் எவருக்கும் அருகதையில்லை.(22ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் உரைகளும் சுமந்திரனின் சவால்களும்

கட்டுரையாளர்
அழகு குணசீலன்

தேசிய மக்கள் சக்தியின் நிர்வாகத்தின் கீழ் வராத உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு நிதி ஒதுக்கப்பட மாட்டாது என்று. அண்மைக் காலமாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அடிக்கடி தெரிவித்து வருகிறார். இக் கருத்து வாக்காளர்கள் மீது மறைமுக அழுத்தம் பிரயோகிக்கும் வகையிலும், தேர்தல் சட்டங்களின் 82 வது சரத்தை மீறும் வகையிலும் அமைந்துள்ளது.

இதை எதிர்க்கட்சிகள் சொல்லியிருந்தால் பத்தோடு பதினொன்றாக கடந்து சென்று விடலாம். ஆனால் சொல்லியிருப்பது சுயாதீன தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பெப்ரல் (PAFFREL) எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய ஒன்றுக்கு பத்து முறை பரிசீலிக்க போகிறாராம் ஜனாதிபதி. மக்கள் அந்த வார்த்தைகளாலேயே தேர்தலில் திருப்பியடிக்க வேண்டும். திசைகாட்டிக்கு வாக்களிக்க முன்னர் ஒன்றுக்கு பத்து முறை சிந்தித்து அதிகாரப் பரவலாக்கத்தின் அடித்தளமான உள்ளூராட்சி சபைகளுக்கு வாக்களிக்க வேண்டியது அவசியமாகிறது.

ஜனாதிபதி ஜனநாயகத்தை மீறிய இந்தக் கருத்தை எட்டு தேர்தல் பிரச்சார மேடைகளில் பகிரங்கமாக பேசியிருக்கிறார். திஸமாராகம, புத்தள, கண்டி, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கந்தளாய், மட்டக்களப்பு, மன்னார் ஆகிய இடங்களில் ஜனாதிபதி வாக்காளர்களுக்கு விடுத்த இந்த மறைமுக மிரட்டல் குறித்து முறையீடு செய்யப்பட்டுள்ளது.



எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட, பல கட்சிகளின் தலைவர்கள், இவர்களில் பலர் சட்டத்துறை சார்ந்தவர்கள் பல்வேறு வார்த்தைப் பிரயோகங்களுக் கூடாக ஜனாதிபதியை கடுமையாக கண்டித்திருக்கிறார்கள். தேர்தல் ஆணையகத்தில் முறைப்பாடுகள் செய்துள்ளார்கள். ஜனாதிபதியின் செயலாளருக்கு இது குறித்து விளக்கம் அளிக்குமாறு கோரி தேர்தல் ஆணையம் கடிதம் எழுதியுள்ளது.

இதற்கிடையில் தேர்தல் ஆணையகத்திற்கும், ஜனாதிபதிக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் சட்டச் சவால் ஒன்றை விடுத்துள்ளார். அவர் திருக்கோவிலில் வைத்து விடுத்த சவால் இது.

உள்ளூராட்சி சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 82 "ஆ", மற்றும் 82"ஈ" ஆகிய இரண்டு பிரிவுகளையும் ஜனாதிபதி மீறியிருக்கின்றார். ஜனாதிபதி மீறியிருப்பதை தேர்தல் கண்காணிப்பு குழுவைச் சேர்ந்த பேராசிரியர் அர்ச்சுன் பராக்கிரம தேர்தல் ஆணைக்குவில் முறைப்பாடு செய்துள்ளார். அது குறித்து தேர்தல் ஆணைக்குழு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எங்கள் அரசியலமைப்பில் 35வது உறுப்புரையில் ஒரு பிரிவு இருக்கின்றது. அது ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடுக்க முடியாது என்பதற்கான விடுபாட்டு உரிமை. இதன்படி பலரும் நினைப்பது ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடுக்க முடியாது என்பது தான். ஆனால் அப்படியல்ல. அப்படி யாராவது வழக்கு தொடுத்தால் ஜனாதிபதி நீதிமன்றுக்கு சென்று விடுபாட்டு உரிமையை கோர முடியும் என்பதே அது என்று சட்ட இருட்டறைக்குள் வெளிச்சம் போட்டுள்ள சுமந்திரன், சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் இரு சவால்களை விடுத்துள்ளார்.

சவால்:1. ஜனாதிபதி நேரடியாகவே தேர்தல் சட்டத்தை மீறியுள்ளார் .



ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடுக்கின்ற தென்பு உங்களுக்கு – தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கின்றதா? நீங்கள் உண்மையாகவே சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழுவாக இருந்தால் ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடுங்கள். ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடுக்க முடியாது என்று எந்த சட்டமும் சொல்லவில்லை.

சவால்:2. அப்படி தேர்தல் ஆணையகம் வழக்குத் தொடுக்கின்ற போது ஜனாதிபதிக்கான விடுபாட்டு உரிமையை விலக்கி அந்த வழக்கை அவர் எதிர் கொள்ளத்தயாரா? என்று அடுத்த சவாலை ஜனாதிபதிக்கு விட்டிருக்கிறார் சுமந்திரன்.

தமிழரசுக்கட்சியின் தமிழ்த்தேசிய முன்னெடுப்பில் சுமந்திரனின் அரசியல் குறித்து கடுமையான விமர்சனங்களை முன் வைப்பவர்களும் அனைத்து விமர்சனங்களுக்கும் அப்பால் ஜனநாயக, நடுநிலையான தேர்தல் ஒன்றுக்காக சுமந்திரனின் இந்த சவால்களை சட்டரீதியாக ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் தமக்குள்ள சிறப்புரிமையை பயன்படுத்தி இல்லாத, பொல்லாத பொய்களை பேசி வருகின்றனர். அந்த பாணியில் தான் ஜனாதிபதியும் தனது வழக்கு விடுபாட்டு சிறப்புரிமையை பயன்படுத்தி வாய்க்கு வந்தவாறு பேசி வருகிறார். இந்த போக்குகளை எதிர்க்கட்சியாக இருக்கும் போது கிழித்து தொங்க விட்ட அநுரகுமார திசாநாயக்கவும், தோழர்களும் அதிகாரத்திற்கு வந்த பின்னர் அதையே செய்கிறார்கள். இதற்கு பாராளுமன்றத்தை சுத்தப்படுத்தல், புதிய அரசியல் கலாச்சாரம் என்ற வெள்ளையடிப்புக்கள் வேறு.

இலங்கையின் ஒட்டு மொத்த அரசியல் வரலாற்றில் மட்டும் அன்றி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி வரலாற்றிலும் முதற் தடவையாக ஜனாதிபதியின் கூற்றுக்கு விளக்கம் கேட்டிருக்கிறது தேர்தல் ஆணையம். அந்த வகையில் இது அநுரகுமார ஆட்சியில் ஒரு கறுப்பு வரலாற்று பதிவு.

ஜனாதிபதி திசாநாயக்க இதற்கு மீண்டும் ஒரு தேர்தல் பிரச்சார மேடையில் பதிலளித்த இருக்கிறார். உள்ளூராட்சி மன்றங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கும், கொள்ளையடிக்கப்படுவதற்கும் நிதி ஒதுக்கப்படாது என்பதையே தான் கூறியதாக அவரது மறுப்பு கூறுகிறது.

ஜனாதிபதியின் கூற்று உண்மையானால் கட்சி தலைவர்கள், சட்ட வல்லுநர்கள், சிவில் அமைப்புக்கள் கூறியவை எல்லாம் பொய்யா? திரிபுபடுத்தலா? அல்லது ஜனாதிபதி சொல்வது போல் தவறாக விளங்கிக் கொண்டதன் விளைவா? தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ள பெப்ரல் அமைப்பு கூடவா இதை தவறாக புரிந்து கொண்டு, திரிபுபடுத்தி பொய் சொல்கிறது....?

ஜனாதிபதிக்கு வக்காலத்து வாங்கியுள்ளவர், கூடிய சீக்கிரம் பிரதமர் பதவிக்கு காத்திருக்கும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க.

தமிழ்மக்களை ஏமாற்றிய கட்சிகளுக்கு இது பற்றி பேச அருகதையில்லை என்று கருத்துச் சுதந்திரத்திற்கு வாய்ப்பூட்டு போட்டுள்ளார்.

இதன்படி ரத்நாயக்க என்ன சொல்ல வருகிறார்? இதுவரை ஏமாற்றியவர்கள் பேசமுடியாது. இனி ஏமாற்றப் போகிறவர்கள் தாங்கள் தான் பேச முடியும் என்பதா? ஜே.வி.பி.யின் சக்தி வாய்ந்த அமைச்சர் ஒருவரிடம் இருந்து வந்துள்ள இந்த பதிலுக்கும், ஜனாதிபதி தேர்தல் சட்ட சரத்து 82ஐ, மீறியுள்ளார் என்ற கட்சிகளின் குற்றச் சாட்டுக்கும், பெப்ரல் குற்றச் சாட்டுக்குமான பொறுப்பு வாய்ந்த பதிலா இது...?

ஜே.வி.பி. எதிர்க்கட்சியில் இருந்த காலங்களில் சட்டம், ஒழுங்கு, ஜனநாயகம், கருத்து சுதந்திரம், அதிகார துஷ்பிரயோகம் போன்ற விடயங்களில் அரசாங்கத் தரப்பை எவ்வளவுக்கு விமர்சித்துள்ளது. இப்போது திசைகாட்டி வந்த வழியை மறந்து வேறு ஒரு வழியால் போய்க் கொண்டிருக்கிறது.

உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் குறித்த கருத்துக்கணிப்பு கூறல் புலனாய்வு அறிக்கைகள் அரசாங்கத்திற்கு சாதகமாக இல்லை என்று கூறப்படுகிறது. இதனை மதிப்பிடுவதற்கு புலனாய்வு அறிக்கை ஒன்று தேவையா? கடந்த ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்கள் விகிதாசார முறையின் கீழ் இடம் பெற்றவை. போனஸ் முறையைக் கொண்டவை. புதிய சட்டத்தின் கீழான உள்ளூராட்சி தேர்தல் போனஸ் அற்ற விகிதாசார முறையைக் கொண்டது. இதில் அரசாங்கம் கடந்தகால வெற்றியைப் பெறமுடியாது. இந்தப் போனஸ் இழப்பை சரி செய்யவே அரசாங்கம் வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லீம் மக்களின் வாக்குகளுக்காக வாடியடித்து, வாயடித்து மிரட்டல் பிரச்சாரம் செய்கிறது.

உண்மையில் இந்த தந்திரோபாயம் சிறுபான்மை தேசிய இனங்களுக்கான அதிகார பகிர்வு – சுயாட்சி கோட்பாட்டை மறுதலித்து, பேரினவாத ஆட்சி அதிகாரத்தை சிறுபான்மை தேசிய இனங்கள் மீது திணிக்கின்ற ஒரு அரசியல் அணுகுமுறையாகவே இந்த தந்திரோபாயத்தை கொள்ள முடியும். இது அரசாங்கத்தின் இலங்கையராதல் அரசியல் பொறிக்குள் மறைந்துள்ள இன, மத, கலாச்சார, பண்பாட்டு தனித்துவங்களையும் கடந்து, கிராமிய மட்ட தலைமைத்துவத்தை கூட கொழும்பு தேசிய அரசியலுக்குள் கரைக்கின்ற பேரினவாத தந்திரோபாயம்.


இந்த போக்கு எதிர்காலத்தில் 13 வது திருத்தத்தினூடான அதிகாரப் பகிர்வை புதிய அரசியல் அமைப்பு ஒன்று வந்தால் (?), திட்டமிட்டு இல்லாமல் செய்வதற்கான வழிமுறை மட்டும் அன்றி இதைக் காட்டி இந்தியாவையும், சர்வதேசத்தையும் இது விடயத்தில் திசைதிருப்ப அரசாங்கத்திற்கு வாய்ப்பாபாக அமையும். இதனாலேயே இந்த தேர்தல் வடக்கு, கிழக்கு சிறுபான்மை தேசிய இனங்கள் தங்கள் அரசியல் அடையாளத்தையும், இருப்பையும் நிலைநிறுத்த மிக, மிக அவசியமானது.

ஜனாதிபதி தையிட்டி விகாரை விடயம் குறித்து வெளியிட்ட கருத்தும் நில ஆக்கிரமிப்பை அங்கீகரிப்பதும், சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்களுக்கு குறுக்கு வழியில் நீதியை தேடும் முயற்சியாகவும் உள்ளது. இது ஜனநாயக விரோதமானதும், சமூக அநீதியை ஊக்குவிப்பதாகவும் அமைகிறது. இந்த விவகாரத்தில் தையிட்டி நில உரிமைக்காக போராடும் குழுக்கள் சமாதானத்தீர்வுக்கு எதிரானவை என்றும், அக்குழுக்கள் இல்லா விட்டால் இப்பிரச்சினையை இலகுவாக தீர்க்க முடியும் என்றும் ஜனாதிபதி கூறுவது நீதிக்கான போராட்டங்களை மறுதலிப்பதாக உள்ளது.


இந்த போதனையை அநுரகுமார திசா நாயக்க காலிமுகத்திடல் அரகலய போராட்டக்காரர்களுக்கு போதிக்க மறந்தது வாஸ்த்தவம் தான். மக்கள் போராட்டம் மூலம் அதிகாரத்தில் அமர்ந்தவர்கள் ஆறு மாதங்களில் அதிகார வெறியில் மக்கள் போரா ட்டங்களை குழப்பவாதிகளின் செயல் என்று காட்ட பார்க்கிறார்கள்.

கடந்து வந்த வழியை மறந்து திசைகாட்டி தவறான திசையை காட்டுகிறதா........?


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! விருப்பத்திற்கு மாறாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். பேச்சில் நிதானம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். உத்யோகஸ்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது.





ரிஷபராசி அன்பர்களே! எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பது தாமத மாகும். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பதும் நல்லது. பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். கணவன், மனைவி அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி ஏற்படும்.





மிதுனராசி அன்பர்களே! புத்தி சாதுரி யமும் அறிவு திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். அடுத்தவரிடம் உங்களது செயல் திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! எடுத்த காரியங்கள் முடிவதில் தாமதப் போக்கு காணப்படும். தேவையற்ற மனச்சஞ்சலம் உண்டாகலாம். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். புதிய வாடிக்கையாளர் களிடம் நிதானமாக பேசி வியாபாரம் செய்வது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் எதையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவர். முயற்சிகள் சாதகமான பலன் தரும். ராசிநாதன் செவ்வாயால் லாபம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் அகலும். தடைப்பட்ட பண உதவி கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.




கன்னிராசி அன்பர்களே! கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டியது அவசியம். சுலபமாக முடிந்து விடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமத மாகலாம். ராசிக்கு 12ல் சஞ்சரிக்கும் ராசியாதிபதி புதன் மனதில் இருந்த கவலையை போக்கி நிம்மதி தருவார். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.வெளியூர் பயணம் அதன் மூலம் அலைச்சல் உண்டாகலாம்.





துலாம்ராசி அன்பர்களே! செயல் திறமை அதிகரிக்கும்.நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரம் விரிவாக்கத்திற்கு தேவையான நிதியுதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணிச் சுமை குறைந்து காணப்படும். குடும்பத்தினரிடம் நன்மதிப்பை பெறுவீர்கள்.





விருச்சிகராசி அன்பர்களே! ஆக்கப்பூர்வமான யோசனைகளை செயல்படுத்தி எதிலும் வெற்றி காண்பீர்கள். செயல் திறன் அதிகரிக்கும். நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்க பெறுவீர்கள். கணவன், மனைவி மனம் விட்டு பேசுவது நன்மை தரும்.








தனுசுராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். எதிர் பாலினத்தாருடன் பழகும் போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும்.




மகரராசி அன்பர்களே! எதிலும் சாதகமான நிலை காணப்படும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உண்டாகும். புதிய நண்பர்கள் கிடைப்பர். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரம், தொழில் தொடர்பான கடிதப் போக்கு சாதகமான பலன் தரும்.




கும்பராசி அன்பர்களே! இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். பேச்சினால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். எதிர் பாராத உதவியால் நன்மை ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். எதிர் பார்த்த பணம் வந்து சேரும்.




மீனராசி அன்பர்களே! எல்லாக் காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நட்பு வகையில் கவனம் தேவை. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். எதிர் பார்த்த பண உதவி கிடைக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## ஸஹ்ரான் குழு:- கூலிக்கு சாகடிக்கும்...

(17ம் பக்கத் தொடர்ச்சி) பலரை விசாரணை செய்யாமல் தெரிவு செய்யப்பட்ட அரசியல் எதிரிகளை மட்டும் முதன்மைப்படுத்தி விசாரணை செய்வது முழுமையான விசாரணையாக அமையப் போவதில்லை. இவற்றிற்கு பின்னரே இதன் பின்னால் இருந்த வெளிநாட்டு, உள்நாட்டு பெரும் புள்ளிகளை – அரசியல் தலைமைகளை — மறைகரத்தை அடையாளம் காணமுடியும்.

அநுரகுமார அரசாங்கம் இங்கு தென்னிலங்கை தேவைகளுக்காக இரண்டு பொறிகளை தமிழ்மக்களுக்கு வைத்துள்ளது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது இன்னொரு விடயம்.

1. FBI அறிக்கையை ஏற்றுக் கொண்டால் இறுதி யுத்தத்தில் சர்வதேச பொறிமுறையை நிராகரித்து இங்கு ஏற்றுக் கொண்டதாக அமையும். எனவே உள்நாட்டு பொறிமுறையின் மூலம் எங்களால் தீர்வு காண முடியும் என்று காட்ட யாரையாவது கழுவில் ஏற்றவேண்டிய தேவை அநுர அரசாங்கத்திற்கு இருக்கிறது.

2. பயங்கரவாத வாததடைச்சட்டம் நடைமுறையில் இருப்பதினால் தான் அதைப் பயன்படுத்தி குற்றவாளிகளை தண்டிக்க முடிந்தது என்று காட்டுவதன் மூலம் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்காது இழுத்தடிப்பது.

இந்த இரண்டுக்கும் பின்னால் அமெரிக்க வரிவிதிப்பு அழுத்தங்களும், ஐரோப்பிய ஒன்றிய ஜி.பி.எஸ். வரி நீக்க நிபந்தனைகளும் உள்ளன. அந்த அழுத்தங்களுக்கு எதிராக அநுர அரசாங்கம் இந்த இரண்டு காரணங்களையும் பேச்சுக்களில் முன்நிலைப்படுத்த முயற்சிக்கின்றது

ஆக நடந்தது தற்கொலை குண்டு தாக்குதல். இது யாரையும் யாரும் கட்டாயப்படுத்தி சுயவிருப்புக்கு மாறாக பயன்படுத்த முடியாது. ஆனால் இரு தரப்பு நன்மைகள், இரு தரப்பு இலக்குகள் குறித்து இணைந்து செயற்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்று மறுப்பதற்கும் இல்லை. அதனால் எய்தவன் இருக்க அம்பை நோவான் ஏன் என்ற கேள்வி இங்கு பொருத்தமற்றது. ஏனெனில் தற்கொலை தாக்குதல்களில் "அம்பே" முக்கியம். அதுவே வெடித்து சிதறுகிறது. இந்த புதையல்கள் கட்சி அரசியலுக்கும், அரசியல் எதிரிகளுக்கும் அப்பால் வெளிப்படைத் தன்மையுடனும், அரசியல் பொறுப்பு, மற்றும் நேர்மையுடனும் தோண்டப்படவேண்டும். இல்லையேல்.........

ஸஹ்ரான் ஒல்லிக்குளத்தில் போட்டதை அநுர அரசியலுக்காக வாவிக்கரையில் தேடினார் என்ற கதையாகவே இதுவும் கடந்து போகும்!

(அழகு குணசீலன் கட்டுரையில் இருந்து சில பகுதிகள்)

## தமிழ்த்தேசியம் எதிர் என்.பி.பி?

(15ம் பக்கத் தொடர்ச்சி) நான் நான் என்று ஒவ்வொரு வேட்பாளரும் சிந்திக்கும் போது அங்கே நாங்கள் என்ற தேசியக் கூட்டுணர்வு ஏற்படாது. நான் நான் என்று சிந்தித்தால் போட்டித் தவிர்ப்பிற்குப் போக முடியாது.நாங்கள் என்று சிந்தித்தால்தான் போட்டித் தவிர்ப்புக்குப் போகலாம். ஆனால் தேசிய மக்கள் சக்தியோ நாங்கள் இலங்கையர்கள் என்று சொல்லிக்கொண்டு தமிழ்க் கிராமங்களைக் கவ்விப் பிடிக்க முயற்சிக்கின்றது.

## இந்து சமுத்திரப் பிராந்தியப் பதட்ட நிலையும்

(20ம் பக்கத் தொடர்ச்சி) கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறியும் அரசியலை விடுத்து மக்கள் நலன்கருதி ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான களம் விரைந்து உருவாக்கப்பட வேண்டும். தீர்வு தொடர்பில் யாரும் முன்முனைப்பு எடுப்பார்கள். நாம் எதிர்வினையாற்றுவோம் என்ற வழக்கமான பல்லவியை விடுத்து நாம் ஒன்றுபட்டு சாத்தியமான மாற்றுத்திட்டங்களை வகுத்து இலங்கை அரசுடனும் சரி சர்வதேச சக்திகளுடனும் சரி இராஜதந்திர ரீதியான நகர்வுகளை மேற்கொள்ள எம்மைத் தயார் செய்ய வேண்டும்.

## வாழ்க்கையில் ஒருமுறை மட்டுமே..

14ம் பக்கத் தொடர்ச்சி) இந்த பழங்குடியினர் விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் வேட்டையாடுதல் ஆகியவற்றை செய்து வாழ்கிறார்கள். பெரும்பாலும் வறண்ட பகுதியிலேயே இவர்கள் வாழ்வார்கள். இவர்களின் முக்கிய உணவு தினை அல்லது சோளத்தால் செய்யப்பட்ட கஞ்சி. அதை அவர்கள் ஒவ்வொரு வேளை உணவிலும் எடுத்துக்கொள்கிறார்கள்.

சிறப்பு சந்தர்ப்பங்களில் மட்டுமே இறைச்சி சாப்பிடுகிறார்கள். இந்த பழங்குடியை சேர்ந்த பெண்கள் தண்ணீரில் அதிக நேரம் செலவிடாமல் இயற்கையாக சுத்தத்தை பேணுகின்றனர். ஹிம்பா மக்கள் கிருமிகள் மற்றும் பாக்டீரியாக்களைக் கொல்லும் புகைக் குளியலைத் தேர்வு செய்கி றார்கள். குளிக்கவும் பூச்சிகளைத் தடுக்கவும் சிறப்பு மூலிகைகளை எரிப்பதன் மூலம் தயாரிக்கப்படும் புகையை அவர்கள் பயன்படுத்து கிறார்கள்.

புகை குளியல்களுடன், வேக வைத்த தாவரங்களால் செய்யப்பட்ட நீராவி குளியல்களையும் ஹிம்பா பெண்கள் சுத்திகரிப்பு சடங்காகப் பயன்படுத்துகின்றனர். இது உடலில் இருக்கும் நச்சுக்கள் நாற்றங்களை போக்க உதவுகிறது.

## கனடாவின் பிரதமர் மார்க் கார்னி இந்தியாவுடனான

(19ம் பக்கத் தொடர்ச்சி) பிரதமருக்கு கனடா குடியுரிமை மட்டுமே இருக்க வேண்டும் என்று கருதுவதால் தனது பிரிட்டிஷ் மற்றும் ஐரிஷ் குடியுரிமையை கைவிட விரும்புவதாகக் கூறினார். கார்னியின் தந்தை ஒரு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக இருந்தவர்.

உதவித்தொகை பெற்று ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திற்குச் சென்று படித்த கார்னி, 1995 ஆம் ஆண்டு, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றார். உள்நாட்டுப் போட்டியால்.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தை தேசிய அளவில் அதிக போட்டித்தன்மையுடன் மாற்ற முடியுமா?' என்பது தான் அவரது முனைவர் பட்ட ஆய்வறிக்கையின் தலைப்பு. அமெரிக்கா விதிக்கும் வரிகளை எதிர்கொண்டு நாட்டுக்குள் வர்த்தகத்தை சீராக்கும் அவரது திறனைச் சோதிக்கும் முக்கியமான பிரச்னை இது.

நன்றி:- பிபிசி 29 ஏப்ரல் 2025

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

---

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# உலக அளவில் அச்சுறுத்தும் போர் சூழலால் இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்த 100 நாடுகள்!

உலக அளவில் அதிகரிக்கும் போர் சூழல், மாறிவரும் புவியியல் அரசியல் ஆகியவற்றின் காரணமாக பல்வேறு நாடுகள் இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீட்டை கடுமையாக அதிகரித்துள்ளன.

உக்ரைன் – ரஷ்யா போர், காசா – இஸ்ரேல் போர், தென் கொரியாவுக்கு வடகொரிய மிரட்டல், தாய்வானுக்கு சீனா மிரட்டல், இந்தியா–பாகிஸ்தான் இடையே மோதல் என உலகின் பல்வேறு பகுதிகளில் அசாதாரண சூழல் நிலவி வருகிறது. இந்நிலையில் 100–க்கும் மேற்பட்ட நாடுகள் தங்கள் ராணுவ ஒதுக்கீட்டிற்கான நிதியை அதிகரித்துள்ளன. ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் நடத்தியுள்ள ஆய்வில், 2023- ஆம் ஆண்டை விட 2024- ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தமாக இராணுவ நிதி 2 லட்சத்து 70 ஆயிரம் கோடி டொலராக அதிகரித்திருப்பது தெரிய வந்துள்ளது. இது 2023- ஆம் ஆண்டை 9 புள்ளி 4 சதவிகிதம் அதிகம்.

இரு பெரிய போர்களின் மையமாக உள்ள ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கில் இராணுவ நிதி ஒதுக்கீடு கணிசமாக அதிகரித்துள்ளது. மற்ற செலவினங்களை குறைத்து விட்டு, இராணுவப் பாதுகாப்பிற்கு அதிக முன்னுரிமை அளிப்பதால், சமூக முன்னேற்ற திட்டங்கள் கடுமையாக பாதிக்கப்படும் என்றும் ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் போர் மற்றும் நேட்டோ கூட்டணிக்கான அமெரிக்காவின் நிலைப்பாடு ஆகியவற்றால் ரஷ்யா உள்பட பல ஐரோப்பிய நாடுகளின் ரஇாணுவச் செலவு 17 சதவீதம் அதிகரித்துள்ளது. இது பனிப்போரின் முடிவில் பதிவு செய்யப்பட்ட அளவை விட அதிகம் என ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் ராணுவச் செலவு 2024 ஆம் ஆண்டில் கூ149 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்துள்ளது. இது 2023 ஆம் ஆண்டை விட 38 சதவீதம் அதிகமாகும், ரஷ்யாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.1 சதவிகிதம் ஆகும். உக்ரைனின் மொத்த இராணுவச் செலவு 2 புள்ளி 9 சதவீதம் அதிகரித்து 64.7 பில்லியன் டாலர்களை கடந்துள்ளது. இது ரஷ்யாவின் ராணுவச் செலவில் 43 சதவீதமாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 34 சதவீதத்துடன், மற்ற நாடுகளை விட மிகப்பெரிய ராணுவச் சுமையை உக்ரைன் சுமக்கிறது. மேலும் தற்போது, உக்ரைன் அனைத்து வரி வசூலையும் ராணுவத்திற்காக செலவிடுகிறது இதனால் சில ஆண்டுகளில் அந்நாடு மிகப்பெரிய பொருளாதார சிக்கலை எதிர்கொள்ளும் என ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்துள்ளது.

ஜெர்மனியின் ராணுவ நிதி ஒதுக்கீடும் 28 சதவீதம் அதிகரித்து, 88.5 பில்லியன் டாலர்களை தொட்டுள்ளது. ஜெர்மனி, இந்தியாவை பின்னுக்கு தள்ளி உலகின் நான்காவது பெரிய ராணுவ நாடாக மாறியுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளின் ராணுவ நிதி ஒதுக்கீடும் கடந்த ஆண்டை விட 15 சதவீதம் அதிகரித்துள்ளது. காசாவை தாக்கி வரும் இஸ்ரேலின் ராணுவ நிதியை 65 சதவீதம் அதிகரித்துள்ளது. எனினும், பிராந்திய பிரச்சனைகளில் சிக்கியுள்ள ஈரான், தனது இராணுவ நிதியை 10 சதவிகிதம் குறைத்துக் கொண்டுள்ளது.



ஈரான் மீது பல்வேறு நாடுகளும் விதித்துள்ள பொருளாதார தடை காரணமாக அந்நாட்டு அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அமெரிக்காவின் ராணுவச் செலவு 5.7 சதவீதம் அதிகரித்து 997 பில்லியன் டாலர்களை கடந்துள்ளது. இது 2024 இல் உலக ராணுவ நிதியில் 37 சதவீதம். அதிகரித்து வரும் சிக்கலான புவிசார் அரசியல் உலகில் தங்கள் அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலைநாட்ட உலகெங்கிலும் உள்ள நாடுகள் தங்கள் ராணுவப் படைகளை பலப்படுத்தி வருகின்றன.

இது இவாறிருக்க வடகொரியா புதிதாகக் தயாரிக்கப்பட்ட போர்க் கப்பல் இருந்து முதல் கப்பல் மற்றும் வான் எதிர்ப்பு ஏவுகணைகளை ஏவிச் சோதனை நடத்தியது என வடகொரிய அரசு செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ புதன்கிழமை தெரிவித்துள்ளது.

சோ ஹியோன் வகைக் போர்க்கப்பல் அடுத்த ஆண்டு பயன்படுத்தப்படும் என்று தலைவர் கிம் ஜாங் உன் கூறினார்.

இக்கப்பலிருந்து சூப்பர்சோனிக் மற்றும் கப்பல் மற்றும் வான் எதிர்ப்பு ஏவுகணைகளை ஏவப்பட்ட சோதனை நடவடிக்கையில் தலைவர் கிம் ஜாங் உன் மற்றும் பிற அதிகாரிகள் கலந்து கொண்டனர். 5,000 டன் எடையுள்ள இந்தப் போர்க்கப்பலுக்கு ஜப்பானிய எதிர்ப்பு புரட்சிகரப் போராளி சோ ஹியோனின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கப்பலின் சக்தி வாய்ந்த தாக்குதல் மற்றும் வழக்கமான பாதுகாப்புகளால் கிம் ஈர்க்கப்பட்டதாகவும், அடுத்த ஆண்டு அது பயன்படுத்தப்படும் என்றும் KCNA தெரிவித்துள்ளது. கடல்சார் இறையாண்மைக்காகவும், தேசிய பாதுகாப்பிற்காகவும் கடற்படையின் அணு ஆயுதங்களை விரைவுபடுத்துவதற்கான நேரம் வந்து விட்டது என்றும் அவர் கூறினார்.

அமெரிக்கா மற்றும் தென் கொரிய உளவுத்துறை பியோங்யாங்கின் நடவடிக்கைகளை கண்காணித்து வருவதாக தென் கொரிய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த கப்பல் அதன் அளவைப் பொறுத்து கப்பலில் இருந்து தரை மற்றும் கப்பலில் இருந்து வான் ஏவுகணைகளை சுமந்து செல்லும் திறன் கொண்டது என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.



# மஸ்கோகா விரிகுடாவில் நடைபெறவுள்ள 2வது சோழா கோப்பை போட்டியில் பங்கு பற்ற ஒன்றுகூடும் உலகத்தமிழ் கோல்ப் வீரர்கள் சமூகம்

தமிழ் கோல்ஃப் வீரர்கள் சங்கம் (TGA - Tamil Golfers Association) பெருமையுடன் அறிவிக்கும் உலகத்தமிழ் கோல்ஃப் வீரர்கள் சமூகத்தை ஒருங்கிணைக்கும் இரண்டாவது சோழா கோப்பை (Chola Cup) போட்டி ஜீன் 19 முதல் 21, 2025 வரை கனடாவின் அழகிய மஸ்கோகா விரிகுடாவில் நடைபெறவுள்ளது.

2023ஆம் ஆண்டு, போர்ச்சுகல் நாட்டில் உள்ள ஃபாரோவில் ஐக்கிய இராச்சிய மற்றும் கனேடிய அணிகளுக்கிடையில் விமரிசையாக நடைபெற்ற முதலாவது சோழா கோப்பை போட்டியில் ஐக்கிய இராச்சிய அணி வெற்றி பெற்றது. அந்த அங்குரார்ப்பண போட்டியின் பாரிய வெற்றியைத் தொடர்ந்து, பலத்த எதிர்பார்ப்புகளுடன் 2025இல் கனடாவில் நடைபெறவிருக்கும் இரண்டாவது போட்டி இன்னும் பிரமாண்டமாக நடைபெறவிருக்கின்றது.



தமிழ்ச் சமூகத்தின் திறமை, ஒற்றுமை, மற்றும் கலாச்சார பெருமைகளை மையப்படுத்தி நடாத்தப்படும் இந்நிகழ்வானது, ஒரு போட்டி என்பதற்கு அப்பால் எமது சமூகத்தின் விடாமுயற்சி, தலைமைத்துவம் மற்றும் சமூக மட்டத்திலான முன்னெடுப்புகளின் தாக்கங்களை உலக அரங்கிலே கொண்டாடுவதற்கான ஒரு தருணமாகவும் அமைகின்றது.

## பங்கேற்கும் அணிகள்

ஐக்கிய இராச்சிய அணியை, ரதீசன் யோகநாதன் (தலைவர்) மற்றும் சுதன் தியாகராஜா (துணை தலைவர்) வழி நடாத்த, திறமை மிக்க வீரர்களான அச்சுதன் கணேசலிங்கம், ஜெயக்கொடி கேசவன், சுரேன் மயில்வாகனம், சிவகணன் கனகதுரை, ரவி ஹரிஹரன், ஸ்கந்தமூர்த்தி ரவிசங்கர், சாந்தகுமார் விக்னேஸ்வரலிங்கம், லியோன் ராசையா ரஞ்சித், முருகேசு லங்காலிங்கம், கஜேந்திரகுமாரன் பத்மநாதன், குகராஜா சண்முகம், பெர்னார்ட் சின்னையா, திருநாவுக்கரசு யாதவன் மற்றும் கஜன் சரவணபவன் ஆகியோர் களமிறங்கவுள்ளனர்.

கனேடிய அணியை, சிவா சிவராஜ் (தலைவர்) மற்றும் நிறஞ்சன் நடராஜா (துணைத் தலைவர்) வழி நடாத்த, மைக்கேல் அமிர்தநாதன், விக்ரம் சிவராஜ், செந்திலர் செபாஸ்டியன், கெவின் லாரன்ஸ்பிள்ளை, வாணி நவரத்தினம், குமரன் சிவா, குமணன் கோபாலசாமி, அருள் ராஜ்குமார், அரவிந்த் கந்தப்பா, மார்க் அமிர்தநாதன், ஜுகான்சன் தயாளன், ஆண்ட்ரூ யேசுதாசன், வளவன் மனோகரராஜா, பாலமுகுந்தன் சாம்பசிவம், ஸ்டான் முத்துலிங்கம் (புரவலர்) ஆகியோர் கொண்ட அணி களமிறங்கவுள்ளது.

## தமிழ் கோல்ப் வீரர்கள் சங்கம் பற்றி

2021 இல் தொலைநோக்குப்பார்வை கொண்ட தொழில்முனைவரும், நற்பணியாளருமான ரதீசன் யோகநாதன் (Lebara Communications நிறுவனத்தின் முன்னாள் நிறுவனர்) அவர்களால் நிறுவப்பட்ட தமிழ் கோல்ஃப் வீரர்கள் சங்கம், உலகெங்கிலும் உள்ள தமிழ் கோல்ஃப் வீரர்களை இணைப்பதற்கும், தமிழ் சமூகத்திற்குள் கோல்ஃப் விளையாட்டை வளர்ப்பதற்கும் சமூக கட்டுமானத்திற்கான ஒரு கருவியாக கோல்ப் விளையாட்டைப் பயன்படுத்துவதற்கும் அர்ப்பணிக்கப்பட்டது.

இன்று TGAஇங்கிலாந்து (450 உறுப்பினர்கள்), கனடா (400 உறுப்பினர்கள்) மற்றும் மலேசியா இந்திய கோல்ஃப் சங்கம் (MIGA — 1000 உறுப்பினர்கள்) உடனான கூட்டிணைப்புடன் உலகளாவிய சக்தியாக வளர்ந்துள்ளது. அத்துடன் போட்டித்தன்மையை மையப்படுத்தி விளையாடும் வீரர்களை ஆதரிப்பதோடு, பொழுது போக்கை முன்னிலைப்படுத்தி விளையாடும் வீரர்களையும் TGA ஆதரிக்கின்றது. மேலும், வலுவான TGA அகாடமி ஊடாக மானிய விலையில் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் நன்கொடையாகப் பெறப்பட்ட விளையாட்டு உபகரணங்களை தேவையின் அடிப்படையில் பகிர்ந்தளித்தல் போன்ற செயற்திட்டங்களின் மூலம் கோல்ஃப் விளையாட்டு சமூகத்திலுள்ள அனைவருக்கும் எட்டக் கூடியவாறும் செய்யப்பட்டுள்ளது.

## Golf Town வளர்ச்சிக்கான மூலோபாய கூட்டணி

இந்த வருடம், கனடாவிலுள்ள முதன்மை விளையாட்டு நிறுவனங்களில் ஒன்றான Golf Town நிறுவனம் மூன்று வருடகால ஒப்பந்தத்தின் அடிப்படையில் TGA Canada நிறுவனத்திற்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளது. இந்த ஒப்பந்தம் நிறைவேற தொலைநோக்குப் பார்வை கொண்ட ஸ்போர்ட்டிங் லைஃப் குழுமத்தின் (Sporting Life Group) தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி சாட் மெக்கினன் (Chad McKinnon) அவர்களின் நேரடி வழிகாட்டுதலே காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. TGA Canada அமைப்பை ஒரு பன்முகத்தன்மை கொண்ட அமைப்பாக அங்கீகரித்து சமூக மட்டத்தில் அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய TGA Tour by Golf Town மற்றும் TGA Academy by Golf Town போன்ற திட்டங்களுக்கு ஆதரவளித்து வருகின்றது.



பாரி வில்லியம்ஸ் (Barry Williams) உள்ளிட்ட கோல்ஃப் டவுன் (Golf Town) நிறுவனத்தின் நிர்வாகக் குழு, TGA இன் திட்டங்களை ஆதரிப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளது. 2025 சோழா கோப்பை போட்டியின் போது அவர்களின் பிரசன்னம் நிகழ்வின் மதிப்பை மேலும் உயர்த்தும். பெரு நிறுவனங்களுடன் பேணப்படும் அர்த்தமுள்ள கூட்டுறவினால் சமூக மட்டத்தில் ஏற்படும் நன்மைகளுக்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

## சோழா கோப்பை - பெருமையும் முன்னேற்றமும் கொண்ட பாரம்பரியம்

சோழா கோப்பை என்பது தமிழ்ச் சமூகத்தின் விடா முயற்சியிலிருந்து தலைமைத்துவம் வரையான உலகளாவிய பயணத்தை எடுத்துக் காட்டும் ஒரு ஒளி விளக்காகும். விளையாட்டு, கலாச்சாரம் மற்றும் சமூக நலம் சங்கமிக்கும் போது, ஏற்படக் கூடிய நன்மைகளுக்கு இது ஒரு நல்ல உதாரணம். ஒரு விளையாட்டுப் போட்டி என்பதற்கு அப்பால், இது தமிழர்களின் பெருமை, ஒற்றுமை மற்றும் பாரம்பரியம் என்பவற்றை பறைசாற்றும் ஒரு பெருமையான குறிப்பு.



தமிழர்களின் பாரம்பரியமும் போட்டிக்கான வேட்கையும் ஒன்று சேருமிடத்தில் மஸ்கோகா விரிகுடாவில் வரலாறு படைக்கப்படும் இந்த நிகழ்வைக் காண ஊடகங்கள், ஆதரவாளர்கள் மற்றும் அனுசரணையாளர்களை அன்புடன் அழைக்கிறோம்!

ஊடக தொடர்பாடல்கள், நேர்காணல்கள், அனுமதிச் சீட்டுகளுக்கு:

மின்னஞ்சல்:tsivaraj@sympatico.ca

இணையதளம்:www.tamilgolfersassociation.ca

www.tamilgolfersassociation.com